MILCO®
දේශයේ අභිමානය

# வருடாந்த அறிக்கை

## 2010-2011



### எமது தொலை நோக்கு

இலங்கையின் தலைசிறந்த போஷாக்குமிக்க உணவு மற்றும் பான உற்பத்தி நிறுவனமாக திகழ்தல்.

### எமது குறிக்கோள்

எமது நாட்டினுள் பால் வளத்தினை தன்நிறைவு செய்வதன் மூலம் தாய் பாலின் பின் பல்வகைப்பட்ட போஷாக்குள்ள உணவு வகைகளை சகல தரத்தினருக்கும் சகல வயதினருக்கும் வழங்குதல்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிறுவனத் தகவல்கள் | 1 |
| தலைவரின் செய்தி | 2 - 3 |
| பிரதித் தலைவரின் செய்தி | 4 |
| செயற்பாட்டு பணிப்பாளரின் செய்தி | 5 |
| தொழிற்சாலை முகாமையாளரின் செய்தி - கொழும்பு | 6 |
| தொழிற்சாலை முகாமையாளரின் செய்தி - அம்பேவெல | 7 |
| தொழிற்சாலை முகாமையாளரின் செய்தி - திகன | 8 |
| தொழிற்சாலை முகாமையாளரின் செய்தி - பொலன்னறுவை | 9 |
| நிதிக் கட்டுப்பாட்டாளரின் மீளாய்வு | 10 - 12 |
| பணிப்பாளர்களின் அறிக்கைகள் | 13 - 14 |
| கூட்டாண்மை நிறுவாகம் | 15 |
| கணக்காய்வுக் குழு அறிக்கை | 16 |
| கணக்காய்வாளர்களின் அறிக்கை | 17 |
| வருமானக் கூற்று | 18 |
| ஐந்தொகை | 19 |
| உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று | 20 |
| நிதிப் பாய்ச்சற் கூற்று | 21 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 22 - 43 |
| நிதி ரீதியான முக்கிய விடயங்கள் | 44 |

# நிறுவன விபரங்கள்

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | - | வரையறுத்த. மில்கோ (தனியார் ) நிறுவனம் |
| சட்ட நிலைமை | - | 1982 ஆம் ஆண்டின் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட வரையறுத்த பொறுப்புள்ள தனியார் கம்பனியாகும். |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | - | இல. 45, நாவல வீதி, நராஹேன்பிட்ட,கொழும்பு 05. |
| | - | தொ.பே. 0112586174,0112582331-4, 0112586872 |
| | - | தொலை நகல் 0112368082, 0115333328 |
| | - | இணையத் தளம் www.milco.lk |
| | - | மின் அஞ்சல் info@milco.lk |
| தொழிற்சாலைகள் | - | கொழும்பு பாற் தொழிற்சாலை |
| | - | அம்பேவெல காற்றால் உலரவைத்தல் தொழிற்சாலை |
| | - | திகன பாற் தொழிற்சாலை |
| | - | பொலன்னறுவை கட்டிப்பாற் தொழிற்சாலை |
| கூட்டிணைத்த திகதி | - | 1996 மே 09 |
| மீள பதிவு செய்த திகதி | - | 2008 மே 19 |
| நிறுவன பதிவு இலக்கம் | - | N (PVS) 17159 ( பழையது) |
| | - | PV 2942 ( புதியது) |
| நிறுவனச் செயலாளர் | - | நிதிச் சேவைகள் மற்றும் வர்த்தக நிறுவனம் இல.28, ரொஸ்மேட் ஒழுங்கை, கொழும்பு 07. |

பணிப்பாளர்கள்

| | |
|---|---|
| திரு. சுனில் விக்ரமசிங்க | - தலைவர் |
| திரு. சன்ஜய லீலாரத்ன | பிரதித் தலைவர் |
| திரு. நவ்சாத் ஜுனைதீன் | பணிப்பாளர் |
| திரு. ஆர். சிவராம். | பணிப்பாளர் |
| திரு. எஸ். லோகநாதன் | பணிப்பாளர் |
| திரு. அஜித் திசாநாயக்க | பணிப்பாளர் |
| திரு. திலங்க விரசிங்க | பணிப்பாளர் |
| திருமதி. தசிகா எட்வட் | பணிப்பாளர் |
| திரு. டப்.ஜி.ஆர்.எச். பண்டிதரத்ன | பணிப்பாளர் |

கணக்காய்வாளர்கள்

- உள்ளக
  எஸ்.ஜே.எம்.எஸ் எசோசியேட்ஸ் இல. 02, காசல் ஒழுங்கை, கொழும்பு 04,
- வெளியக
  பீ.டி.ஓ பாட்னர்ஸ், சித்தம்பலம் ஏ காடின்ா் மாவத்தை கொழும்பு 02.

வங்கியாளர்கள்

- மக்கள் வங்கி
- இலங்கை வங்கி

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவன செயலாற்றுகை பற்றிய தற்பொதைய மீளாய்வை சமர்ப்பிப்பதில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

மீளாய்வு ஆண்டின் போது நிறுவனத்தின் விற்பனையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 11.5 % நியாயமான வளர்ச்சியைக் காட்டுகின்றது. 2009 / 2010 ஆண்டின் ரூபா. 4. 2 பில்லியன் விற்பனையுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டு விற்பனையானது ரூபா 4.7 பில்லின் இலக்கினை எட்டியுள்ளது.

மீளாய்வு ஆண்டில் கம்பனியின் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 111 மில்லியனாக இருந்தது. விவசாயிகளுக்கு செலுத்திய பசும் பாலின் விலையில் அதிகரிப்பொன்று ஏற்பட்டமையின் காரணமாக இலாபத்தன்மையில் வீழ்ச்சியொன்று ஏற்பட்டுள்ளதோடு முடிவுப் பொருள் விலையில் அதிகரிப்பு ஏற்படவில்லை. இது எங்களுடைய கூட்டாண்மைப் பொறுப்பாக இருப்பதுடன் இதன் காரணமாக ரூபா 86.2 மில்லியன் கிரயம் ஒன்று கம்பனிக்கு ஏற்பட்டுள்ளதுடன் இது மீளாய்வு ஆண்டுக்கான இலாபத்திற்கு எதிராக இணக்கம் செய்யப்பட்டுள்ளது. 06 மாத காலத்துக்கான தொழிற்படு முதல் தொகையொன்றை கட்டியெழுப்புமாறு திறைசேரயினால் விடுத்த வேண்டுகோளின் படி, கம்பனியாது இற்றை வரை ரூபா 935 மில்லியன் தொகை ஒதுக்கத்தை உருவாக்கியுள்ளது. பால், மூலப்பொருள், பொதிசெய் பொருள் மற்றும் சம்பளம் முதலியவைக்கான கொடுப்பனவுக்காக தேவைப்படும் தொகை ரூபா 2.1 பில்லியன் தொகையாகும். இத் தேவை தொடர்பாக, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கி போன்ற வங்கிகளில் 8.5 % முதல் 9.0 % வரையான நியாயமான வருடாந்த வட்டி வீதத்தில் நிலையான வைப்புக்களில் ஒதுக்கங்கள் வைப்பிலிடப்பட்டுள்ளன.

**பால் சேகரிப்பு மற்றும் கொள்வனவு**

பாரிய வெள்ள நிலைமையின் காரணமாக சுமார் 75,000 கால் நடைகள் இறந்தமையினால் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியிலும் மற்றும் இவ் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் பால் சேகரிப்பானது தடைப்பட்டன. எவ்வாறாயினும், மில்கோ நிறுவனத்தின் சிறந்த கள முயற்சியால் தற்பொழுது பால் சேகரிப்பானது நாளொன்றுக்கு 185,000 லீட்டர் வரை கனிசமான அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும் மில்கோ நிறுவனத்திற்கு 2300 விவசாயிகளைக் கொண்ட சமுகங்கள் பால் பொருட்களை வழங்குகின்றனர். நாடு பூராக 77 குளிரூட்டல் நிலையங்கள் பரந்து காணப்படுவதுடன் இவற்றிலிருந்து நான்கு (4) தொழற்சாலைகளுக்கு இவ்விடங்களிலிருந்து பால் கொண்டு செல்லப்படுகின்றன. பால் சேகரிப்பு தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | லீட்டர் (மில்லியன்கள்) | முன்னேற்றம் % |
|---|---|---|
| 2006 | 53.46 | |
| 2007 | 53.98 | + 0.97 |
| 2008 | 53.40 | -1.07 |
| 2009 | 54.85 | +2.71 |
| 2010 | 55.51 | +1.20 |
| 2011 இன்று வரை | 32.56 | |
| 2011 கிழக்கு | 61.80 | +11.33 |

**விஸ்தரிப்பு**

பால் சேகரிப்புச் செயற்பாடுகளானது கிராமங்களினை முழுமையாக ஊடறுத்துள்ளதுடன் பெருந்தோட்டத் துறையினை உள்ளடக்கி உள்ளமை மிக முக்கிய விடயமாகக் காணப்படுகின்றது. இப் பிரதேசங்களில், இயலளவு 300 லீட்டர், 500 லீட்டர் மற்றும் 1000 லீட்டர் வரையான கொள்ளளவுகளைக் கொண்ட 25 சிறிய பாலினை குளிராக்கும் நிலையங்களை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளது. விவசாயிகளின் ஒரு லீட்டர் பசும் பால் தொடர்பாக விலையானது ரூபா. 50.00 வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இது சிறந்த தரமான பால் தொடர்பாக 12.5 % ஆகக் குறைந்த மொத்த கட்டித் தன்மை தொடர்பாக இத் தொகை செலுத்தப்படுகின்றது. விவசாயிகளின் ஒரு லீட்டர் பால் தொடர்பாக வழங்கப்படுகின்ற தற்பொழுதைய விலையானது உலகச் சந்தை விலை அல்லது அதிலும் கூடிய விலையில் காணப்படுகின்றது. இந்த முயற்சிகளுக்கு மேலதிகமாக, காலை வேளைகளில் சிறிய குளிரூட்டல் நிலையங்களிலிருந்து பசும் பால் சேகரிப்பதற்காகவும் பின்னேரங்களில் பால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காகவும் 50 துவிச் சக்கர வண்டி உரிமையாளர்களை சுய தொழில் தாரர்களாக ஈடுபடுத்துவதற்கும் மில்கோ நிறுவனம் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள உள்ளது. ஒரு நாளைக்கு ரூபா. 1000 வருமானம் ஒன்றினை உழைத்துக் கொள்வதற்கு இதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முன்னெடுப்பினை ஒரு கூட்டாண்மை பொறுப்பாகவும் நிறுவனத்தின் இலாபத்தை ஈட்டித் தருகின்ற விற்பனை நன்மையினை வழங்குகின்ற வகையிலும் நாடு பூராகவும் விஸ்தரிப்புச் செய்வதற்கும் இச் செயற்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**பசும் பாலின் தரம்**

சிறந்த பால் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் நோக்கில் உயிர்சத்து நிறைந்ததாகவும் பக்டிரியாக்களின் தொழிற்பாட்டை பேணிக் கொள்ளும் வகையிலும் பாலின் தரத்தை பேணுதல் பிரதான குறிக்கோளாக உள்ளது. இதன் ஒரு முன்னெடுப்பாக, கடந்த ஆண்டின் பிற்பகுதியிலிருந்து நாளாந்தம், குளிரூட்டல் நிலையங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்காக பால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறந்த பசும் பாலை பெற்றுக் கொள்வதற்காகவும் அடிப்படை ஊட்டச் சத்து செயற்பாடுகள் தொடர்பாக விவசாயிகளை அறிவுறுத்துவதற்குமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**உற்பத்தி**

கொழும்பு (நாராஹேன்பிட்ட), திகன, அம்பேவள மற்றும் பொலொன்னறுவை போன்ற இடங்களில் உற்பத்தி வசதிகளை மில்கோ நிறுவனம் கொண்டுள்ளது. இலங்கை விவசாயிகளிடமிருந்து சேகரித்த பசும் பாலிலிருந்தே மொத்த பாற் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஹைலேன்ட் உற்பத்திக் குறியின் கீழ் 10 வகைகள் மற்றும் 52 இருப்புச் சேகரித்தல் பிரிவுகள் வாடிக்கையாளர்களுக்காக நாடு பூராகவும் காணப்படுகின்றன. இவ் உற்பத்தி வகைகளாவன: கிருமி நீக்கம் செய்யப்பட்ட மற்றும் மருந்து சேர்க்கப்பட்ட திரவப் பால், சுவையூட்டப்பட்ட தயிர், ஐஸ்கிரீம், பட்டர், நெய், சீஸ், தயிர், கட்டிப் பால் மற்றும் முழு ஆடைப் பால் என்பனவாகும். இந்த உற்பத்திகளுக்கு மேலதிகமாக, ''ஹைலேன்ட் ஸ்பிரிங்'' தூய்மையாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சொக்கலேட் என்பவற்றையும் அறிமுகம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

### விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்

நாடு பூராகவும் மில்கோ நிறுவனத்தின் உற்பத்திகளை விநியோகம் செய்வதற்காக 115 விநியோகத்தர்கள் உள்ளனர். விற்பனை பதவியணியானது விற்பனை பிரதிநிதிகள் 26 பேர், பிராந்திய முகாமையாளர்கள் 07 பேர் மற்றும் நிருவாக அலுவலர்கள் 06 பேர்களைக் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், 50 பதவியினர்களைக் கொண்ட 11 விற்பனை நிலையங்களை கம்பனி கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக கம்பனியானது நாடு பூராக 09 வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. உற்பத்திகளை புதுப்பித்தல் மற்றும் புதிய உற்பத்திகளை அடையாளம் காணல் போன்றன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் சந்தைக்கு “ கொழுப்பற்ற, சீனியற்ற “ யோகட் வகையொன்றினை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளதுடன் நுகர்வோர் நம்பிக்கையில் தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் காணக் கூடியதாக உள்ளது. மேலும், ஸ்டோபரி வாசனை சேர்க்கப்பட்ட யோகட் வகையொன்றினை அறிமுகம் செய்வது தொடர்பான நுகர்வோர் அவை பரிசோதனை கைத்தொழில் பரீட்ச்சிப்பானது நிறைவு செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி மறு சீரமைப்பின் ஒரு பகுதியாக,” ஹைலன் மில்க் மேட்” என்ற வியாபாரக் குறியின் கீழ் கட்டிப்பாலாக்கப்பட்ட பால் பொருளின் அறிமுகமானது சர்வதேச அளவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்த உற்பத்தியானது 9 மாத செயல் வலுக் காலத்தைக் கொண்ட இந்த உற்பத்தி தொடர்பாக இதன் ஊடாக ஏற்றுமதிச் சந்தையினை உருவாக்கிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், குறைந்த கலோரியைக் கொண்ட பினக் குழம்பு (ஐஸ்கிரீம்) உற்பத்தி தொடர்பாக சந்தை பரீட்ச்சிப்புக்களை மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### யுஎச்ரி (UHT)

ஒரு மாத காலம்வரை இராக்கைகளில் வைத்துக் கொள்ளத்தக்க நீண்ட பாவனைக் காலத்தைக் கொண்ட யுஎச்ரி பால் வகையினை எதிர் காலத்தில் அறிமுகம் செய்வதற்கு இயலுமை கிடைத்தமை உண்மையில் மிக முக்கிய முன்னேற்றமாகும். தற்பொழுது உள்ள கிரிமி நீக்கம் செய்யப்பட்ட திரவப் பாலை 3 நாட்கள் மாத்திரம் வைத்துக் கொள்ள முடிவதுடன் இந்த குறுகிய பாவனைக் காலத்தை கவனத்திற் கொண்டு அவற்றை வினியோகம் செய்தல் கடின விடயமாகக் காணப்படுகின்றது. ஆரம்ப அறிமுகத்தின் போது, ரூபா 25/- ரூபா பெறுமதியான மி.லீ. 180 (இரண்டு சுவை வகைகள்), ரூபா 50/- விலை குறிக்கப்பட்ட மி.லீ. 450 மற்றும் மி.லீ. 900 உடைய ரூபா. 90/- ஆகிய மூன்று வகையான உற்பத்திகளை அறிமுகம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இற்றை வரை பால் மா பாவனைக்கு பழகியிருக்கின்ற எமது வாடிக்கையாளர்களை திரவப் பால் பாவனைக்கு ஊக்கப் படுத்தும் காலத்தின் முதற் கட்ட ஆரம்பம் இதுவாகும்.

### மில்கோ நிறுவனத்தின் பதவியினர்கள்

‘தொழில்சார் பிரவேச அபிவிருத்தி’ யை ஏற்படுத்தல் எமது பதவியணியினர் தொடர்பாக மிகவும் முக்கியமாக உள்ளது. பலதரப்பட்ட தொழிற் துறைகளுக்கு உரிய பதவியணியினர் தொடர்பாக பயிற்சிகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வருட முடிவில் பதவியணியினர் கணிப்பீடு செய்தல் தொடர்பாக முன்னோடி செயலாற்றுகை குறிகாட்டிகளைக் கொண்ட செயலாற்றுகை அபிவிருத்தி வழிகாட்டலொன்றை தயார் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அனுபவங்களைக் கொண்ட பதவியணியனர் குழாமாக இருப்பதனால் இது மில்கோ நிறுவனதிற்கு ஒரு வளமாக இருப்பதுடன் நிறுவனத்தினுல் சகல சேவைப் பிரிவுகளுக்கும் உரிய 1460 ஊழியர் குழாத்தைக் கொண்டுள்ளது.

### முன்னோக்கிய பயணம்

இலங்கை மக்களுக்குத் தேவையான ஊட்டச் சத்து நிறைந்த உணவுகளை வழங்குவதற்கு மில்கோ நிறுவனமானது அர்பணித்து செயற்படுகின்றது. கைக் குழந்தை முதல் வயோதிபர் வரை சமுகத்தில் உள்ள சகல வகையான நுகர்வுக் குழுக்கள் தொடர்பாக உற்பத்தி வகைகளை மில்கோ நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது. அவை ‘ பணத்துக்கான பெறுமதி’ என்ற தொனிப் பொருளின் கீழ் தயார் செய்யப்பட்டுள்ளது. ஏனைய ‘உணவு மற்றும் குடிபானக் கம்பனி’ நிலைமையிலிருந்து தேசத்திற்கு ஊட்டச்சத்தை வழங்குகின்ற “போசனை நிறைந்த உணவு மற்றும் குடிபான நிறுவனம்” என்ற நிலையை மில்கோ நிறுவனம் அடைந்துள்ளது. மக்களுக்கு சேவை வழங்குவதுடன் பாதுகாப்பு வழங்குகின்ற இலங்கையின் முதலாந் தர நிறுவனமாக உருவெடுக்கும் நிலைமையை தற்பொழுதே மில்கோ நிறுவனம் வெளிகாட்டி உள்ளது.

### பொது

வெற்றிப் பாதைக்கு நுழைவதற்கான ஒரு சில சிக்கல்கள் காணப்பட்ட போதும அவ் விடயங்களை மில்கோ நிறுவனம் சீர் செய்ய வேண்டி உள்ளது. நிறுவனத்தின் முன்னேற்றத்தை தடைபடுத்துகின்ற பிரதான காரணியாக காணப்படுவது, உரிய தரம் மற்றும் போதியளவான பசும் பால் நாட்டில் இன்மையாகும். நாட்டில் பால் உற்பத்திகளுடன் தொடர்புடைய துறையில் 50% சதவீதமான விற்பனைப் பங்களிப்பை கைப்பற்றிக் கொள்வது எமது பிரதான குறிக்கோளாகும். வருடம் ஒன்றிற்கு இலங்கையானது அண்ணளவாக அமேரிக்க டொலர் 390 மில்லியன் பெறுமதியான பாற் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்கின்றது. இறக்குமதி செய்வதை நிறுத்தி வெளிநாட்டுச் செலவாணியை பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கைக்கு பாசும் பால் லீட்டர் 600 மில்லியன்களை உற்பத்தி செய்ய வேண்டி உள்ளது.

தற்பொழுது அந்த அளவானது வருடம் ஒன்றிற்கு மில்லி லீட்டர் 125 வரை காணப்படுகின்றது. நடைமுறையில் பார்க்கின்ற போது இந்தப் பணியினை அடைந்து கொள்ளக் கூடிய விடயமாகக் காணப்படுகின்றது.

கால் நடை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சானது பசும் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பல திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் பசும் பால் தேவையில் தன்னிறைவு நிலையினை அடைதல் எமது குறிக்கோளாகும்.

இறுதியாக, மில்கோ கம்பனியின் முன்னேற்றப் பாதையில் பங்களிப்புச் செய்கின்ற அனைவருக்கும் மற்றும் விசேடமாக பால் துறையில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் மில்கோ பணிப்பாளர் சபை சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன.

**சுனில் விக்ரம சிங்க**
தலைவர்
வரையறுத்த மில்கோ ( தனியார் ) கம்பனி

# பிரதித் தலைவரின் செய்தி

மில்கோ நிறுவனத்தின் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை தொடர்பாக நிறுவனத்தின் பிரதித் தலைவர் என்ற வகையில் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசாங்கத்தினால் கையேற்றுக் கொண்ட நிறுவனம் ஒன்று என்ற வகையில் நாங்கள் நிறைவு செய்ய வேண்டிய செயற்பணிகள் இரண்டு உள்ளன. முதலாவதும் முன்னோடியுமான பணியாக இருப்பது எமது உற்பத்தி பற்றி நம்பிக்கை வைத்துள்ள நுகர்வோர்களைப் பாதுகாத்தல் இருப்பதுடன் இரண்டாவதாக இருப்பது நிறுவனத்திற்கு நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ள பால் பண்ணை தொழிலாளர்களைப் பாதுகாத்துக் கொள்வதுமாகும்.
எனினும், நாங்கள் கொண்டுள்ள பாரிய பொறுப்பாக இருப்பது 1500 மேற்பட்ட ஊழியர்களின் தொழில்களைப் பாதுகாத்தல் ஆகும். தனியார் துறைபோன்று எமது நிறுவனம் இலாபத்தை இலக்காகக் கொண்டு செயற்படாத போதும் எமது அபிப்பிராயமாக இருப்பது எமது பெறுமதி மிக்க நுகர்வோர்களுக்கு போசனை நிறைந்த தரமான உற்பத்திகளை வழங்குவதாகும்.

அதிஷ்டவசமாக பணிப்பாளர் சபை மற்றும் உயர் முகாமைத்துவமானது இறுதி நுகர்வோர் மீது சுமைகளை ஏற்படுத்தாது பாற் தொழிலாளர்களை தைரியப்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை உயர்த்தியமை தொடர்பாக புத்திசாதுர்யமான தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. அதன் காரணமாக எமது நிறுவனம் கொண்டுள்ள தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தி இயலளவை உயர்வடையச் செய்து நிறுவனத்தினுள் வினைத்திறன் மற்றும் செயலாற்றுகை வளர்ச்சியினை மேம்படுத்தி கிரயங்களை மேற்கொள்ளல் தொடர்பாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது எமது நிறுவனமானது விழுமிய ரீதியாக செயற்படுத்திய விதத்தினை நிறுபிக்க கூடிய மாற்றம் ஒன்றைக் காணக் கூடியதாக உள்ளது.

இறுதியாக, கௌரவ அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு, பணிப்பாளர் சபையிற்கு, தொழிற்சங்கங்களுக்கு மற்றும் நிறுவனத்தின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்த மொத்த பதவியணியினருக்கு எனது மனப் பூர்வமான நன்றியினைத் அக மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சன்ஜய லீலாரத்தன**
பிரதித் தலைவர்
மில்கோ (தனியார்) கம்பனி

செயற்பாட்டுப் பணிப்பாளரின் செய்தி
2010 ஆம் ஆண்டு மே மாதத்தில் மில்கோ (தனியார்) கம்பனியின் தொழிற்பாட்டுப் பணிப்பாளர் என்ற வகையில் கடமைகளை பொறுப்பேற்று இந்தச் செய்தியினை எழுதுகின்றேன்.

எமக்கு மில்கோ நிறுவனம் என்ற வகையில் கௌரவ அமைச்சர், செயலாளர் மற்றும் அமைச்சின் பணிகள் சபை மற்றுமல்லாது நிறுவனத்தின் தலைவர், பிரதித் தலைவர் மற்றும் அனைத்து தரங்களுக்குரிய பதவியினர்களின் ஒத்துழைப்புடன் முன்னோக்கி பயணம் செய்வதற்கு இயலுமை கிடைத்துள்ளது.

நான் இந்தச் சந்தர்பத்தில் எமது இலக்கினை நிறைவு செய்வதற்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு தொடர்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் பாரிய அழிவை ஏற்படுத்திய வெள்ளத்தின் காரணமாக சில தடைகள் ஏற்பட்ட போதும் மில்கோ நிறுவனம் அதன் ஊழியர்களுக்கு, அமைச்சு மற்றும் கௌரவ அமைச்சரின் முயற்சியின் காரணமாக அவற்றிற்கு முகங்கொடுக்க இயலுமை கிடைத்துள்ளது.

பால் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்ற பாற் உற்பத்திப் பண்ணையாளர்களை ஊக்கப்படுத்தி தைரியப்படுத்தியமை தொடர்பாக பால் கொள்வனவு விலை கருதத் தகு அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. பாலின் விலையினை உயர்த்தியதன் பின்னர் அதிகமான பால் உற்பத்தியாளர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பது எனது நம்பிக்கையாகும். தேசிய கால் நடை வள சபையின் பண்ணைகளில் அமைச்சினால் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள பாரிய பண்ணைகள் மில்கோ நிறுவனத்திற்கு பாரிய அளவில் சிறந்த பாலினை கொள்வனவு செய்து கொள்வதற்கு உதவி புரியக் கூடியதுடன் அவை பால் உற்பத்தி தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிறுவன செலவீனத்தை குறைத்துக் கொள்வதற்கு உதவி புரியக் கூடியது.

மில்கோ ( தனியார்) நிறுவனம் சகல அலுவல்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு பிராத்திப்பதுடன் உத்தேச குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பங்களிப்புச் செய்த மொத்த ஊழியர்களை மதிக்கின்றேன்.
எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

**திரு. நவ்ஷாத் ஜுனைதீன்**
செயற்பாட்டுப் பணிப்பாளர்
மில்கோ (தனியார்) கம்பனி

# கொழும்பு தொழிற்சாலை முகாமையாளரின் செய்தி

2010 / 2011 ஆம் ஆண்டின் போது கொழும்புத் தொழிற்சாலை அமைப்பில் மொத்த ஊழியர் செயலாற்றுகையினை மிகவும் சிறந்ததாக மாற்றியமைத்தல் தொடர்பாக அதன் செயலாற்றுகை மீண்டும் தயார் செய்யப்பட்டுள்ளது.

பணிச் சட்டகத்தினை மீண்டும் தயார் செய்வதும் நிறுவனத்தின் பொறிகள் மற்றும் இயந்திரம் தொடர்பாக கொடுப்பனவுகள் ஏதும் இன்றி வருமானம் உழைக்கும் இயலுமையினை கவனத்திற் கொண்டு யோகட் உற்பத்தியினை உச்ச இயலுமையுடன் பேணிச் செல்வதற்கு கொழும்பு பால் தொழிற்சாலைக்கு இயலுமை கிடைத்துள்ளது. பழைய உபகரணங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களைப் பொருத்தி உற்பத்தியினை செயற்பாடுகளை மேம்படுத்தி ரூ.17 மில்லியன் செலவிற்கு தொடர்ச்சியாக ஐஸ்கிரீம் குளிராக்கும் இயந்திரங்கள் இரண்டினை அறிமுகம் செய்ததன் பின்னர் ஐஸ்கிரீம் உற்பத்தி அதிகரித்துள்ளது. பழைய இரும்பு பொதிப் பெட்டிக்குப் பதிலாக கொள்வனவு செய்த பிலாஸ்டிக் பொதிகள் பெட்டிப் பயன்பாட்டுடன் இணைவாக உயிரூட்டம் செய்யப்பட்ட பால் போத்தல்களை பகிர்வு செய்யும் தன்மையினை உயர்த்துவதற்கு இயலுமை கிடைத்துள்ளது.

பிரதான அலுவலகத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அபரிமிதமான முயற்சியின் பெறுபேறு ஒன்றாக சீனியல்லாத கொழுப்பற்ற யோகட் மற்றும் ஸ்டோபரி யோகட் என்ற பெயரில் புதிய இரண்டு உற்பத்தி வகைகளினை அறிமுகம் செய்வதற்கு எமக்கு இயலுமை கிடைத்துள்ளது.

1956 ஆம் ஆண்டு தேசிய பால் சபை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து திறக்கப்பட்ட இந்த தொழிற்சாலை இது வரை பலதரப்பட்ட உற்பத்திகளுடன் விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அமைவிடத்தை கவனத்திற் கொள்ளும் வரை அது தற்காலிகமான இடமாக காணப்பட்டது. விசேடமாக களஞ்சியத் தேவைகள் ஆகியவற்றை கவனத்திற் கொள்ளும் போது இயலளவு விஸ்தரிப்பு தொடர்பாக கட்டிடங்களில் பௌதீக அளவினை விஸ்தரிப்புச் செய்யும் தேவை காணப்படுகின்றது. அதே போன்று, அக் காலத்தில் பிரபல்யமான பிரதேசம் ஒன்றல்லாத நாராஹேன்பிட்டவில் அமைந்துள்ள தொழிற்சாலையில் தற்பொழுதைய நிலைமை முழுமையாக மாற்றம் மடைந்துள்ளதுள்ளது.

இந்த விடயங்களைக் கவனத்திற் கொண்டு இந்தத் தொழிற்சாலை நவீன தொழில் நுட்பங்களுடன் கொழும்பு நகரத்திற்குப் புறம்பாக புதிய இடத்திற்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் வரலாற்றில் மிக முக்கிய கட்டமாக இருக்கக் கூடிய இது உற்பத்திச் செயற்பாடுகள் பாரிய அளவில் உயர்வடையச் செய்வதற்கு காரணமாக அமையலாம்.

சுதத் முனசிங்க
தொழிற்சாலை முகாமையாளர்
கொழும்பு பால் தொழிற்சாலை

# அம்பேவல தொழிற்சாலை முகாமையாளரின் செய்தி

மில்கோ நிறுவனத்தின் 2010 / 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையிற்கு செய்தியொன்றை வெளியிடுவது தொடர்பில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உள்நாட்டு நுகர்வோர்கள் மிகவும் பழக்கப்பட்டிருக்கின்ற பால் மா பயன்பாட்டின் போது அவர்கள் மிகவும் விரும்புகின்ற "ஹைலேண்ட்" பால் மா மற்றும் பட்டர் எமது அம்பேவல தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவதுடன் மில்கோ நிறுவனத்தின் ஊடாக சேகரிக்கப்படுகின்ற பசும் பாலின் 60% மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

அநுராதபுரம், பொலொன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, பதுள்ளை, நுவரெலிய ஆகிய மாவட்டங்களில் பால் உற்பத்தி விவசாயிகளினால் வழங்கப்படுகின்ற பாலிலிருந்து மிகவும் போசாக்கு நிறைந்த, உயர் தரத்தினைக் கொண்ட இந்த பால்மா மற்றும் பட்டர் உற்பத்தி செய்யப்படுவதுடன் அதற்கான சிறந்த தீர்வாக உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை தொடர்பில் வழங்கப்படுகின்ற ISO – 22000 தரச் சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பதை மிகவும் பெருமையுடன் குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.

2010 / 2011 ஆம் ஆண்டின் போது தொழிற்சாலையின் உற்பத்திகளில் ரூ 211 மில்லியன் நிகர இலாபம் பெறப்பட்டு நிறுவனத்தின் எதிர் காலச் செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறான அபிவிருதிக்கு ஊக்கம் வழங்கிய சிறந்த அறிவு மற்றும் அனுபவம் மிக்க தொழிற்சாலையின் ஊழியர் தொகுதியினர் இச் சந்தர்பத்தில் மனப்பூர்வமாக நினைவு கூற விரும்புகின்றேன்.
எதிர்காலத்தில் இலங்கையில் பால் உற்பத்தி அதிகரித்ததைத் தொடர்ந்து எமது ஏனைய தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தி செய்கின்ற திரவப் பால் மற்றும் பெறுமதி அதிகரிக்கப்பட்ட பால் உற்பத்திகளுக்கு இந்தப் பாலைப் பயன்படுத்திக் கொண்டதன் பின்னர் மேலதிகமாக உள்ள பால் அம்பேவெல தொழிற்சாலையில் பால் மா மற்றும் பட்டர் உற்பத்தி தொடர்பாக கட்டாயமாக பயன்படுத்த வேண்டி உள்ளது. இது தொடர்பாக தொழிற்சாலையின் இயந்திர சாதனங்களும் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டி உள்ளது.

இறுதியாக, மில்கோ நிறுவனத்தின் முதுகெலும்பினை வலுப்படுத்தும் பங்குதாரர் ஒருவர் என்ற வகையில் பங்களிப்பை வழங்கி செய்யப்படுகின்ற செயற்பணினை தொடர்ந்து மேற்கொள்வது எமது குறிக்கோளாகும்.

ஏ.என். பின்னலந்த
தொழிற்சாலை முகாமையாளர் – அம்பேவெல.

பிரதானமாக யோகட் மற்றும் ஐஸ்கிரீம் உற்பத்தியினை முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 2010/2011 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது திகன பால் தொழிற்சாலையின் மொத்த செயலாற்றுகை பற்றி திருப்தியடைந்து கொள்ள முடியும்.

நவீன தொழில்நுட்பத்தினை அறிமுகம் செய்து தொழிற்சாலையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு திட்டம் தீட்டப்பட்டு வருகின்றது. திரவப் பால் செயற்பாட்டின் படி அடிப்படையாக உள்ள புதிய யு.எச்.டி முறைமையினை ஆரம்பித்ததின் ஊடாக இந்த குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்படும். யோகட் மற்றும் ஐஸ்கிரீம் உற்பத்தி இயலளவு புதிய இயந்திர சாதனம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இரண்டு மடங்கு வரை அதிகரித்துள்ளது. மேற்படி குறிக்கோள்களை அடைந்து கொள்வது தொடர்பாக சகல மட்டங்களிலும் உள்ள ஊழியர்களை ஊக்கப்படுத்தல் மிக முக்கியமாகும்.

யோகட் மற்றும் ஐஸ்கிரீம் உற்பத்தி இயலளவு கீழ் உள்ள அட்டவணையில் உள்ளவாறாகும்.

| உற்பத்தி | 2007/2008 | 2008/2009 | 2009/2010 | 2010/2011 |
|---|---|---|---|---|
| யோகட் : மி.லீ. 80 | 10,044,064 | 10,767,619 | 13,114,715 | 14,245,333 |
| ஐஸ்கிரீம் ( லீட்டர்) | 1,755,830 | 2,101,976 | 2,370,809 | 2,280,411 |

| உற்பத்தி | 2007/2008 | 2008/2009 | 2009/2010 | 2010/2011 |
|---|---|---|---|---|
| யோகட் விற்பனை ( ரூ ) | 10,044,064 | 10,767,619 | 13,114,715 | 14,245,333 |
| ஐஸ்கிரீம் விற்பனை ( ரூ ) | 1,755,830 | 2,101,976 | 2,370,809 | 2,280,411 |

உத்தேச செயற்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் உயர் அபிப்பிராயம் உள்ள பதவியணியுடன் திகன பாற் தொழிற்சாலை இலாபகரமான உற்பத்தி நிருவனமாக உருவெடுத்துள்ளது.

**ஆர். எம். ஜே. பீ. ரத்னாயக்க**
தொழிற்சாலை முகாமையாளர் (பதில்)
திகன

# பொலொன்னறுவை தொழிற்சாலை முகாமையாளரின் செய்தி

2010 / 2011 ஆம் நிதி ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கு செய்தியொன்றை வழங்குவதற்கு கிடைத்தமையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.
2008 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலையின் பணிகளைப் பொறுப்பெடுத்துக் கொண்டதைத் தொடர்ந்து மில்கோ நிறுவனமானது" ஹைலேன்ட்" வியாபாரக் குறியின் கீழ் கட்டிப் பால் உற்பத்தியை ஆரம்பித்துள்ளது. பிற்பட்ட காலத்தில் ஹைலேன்ட் கட்டிப் பால் தொடர்பாக எஸ்எல்எஸ் தொடர்பாக தகைமை பெற்றுள்ளது.

2010 / 2011 ஆண்டு காலப் பகுதியில் நுகர்வோரின் வசதி தொடர்பாக கட்டிப் பால் உற்பத்திகளின் பொதிகள் தொடர்பாக சிறிய மாற்றங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாங்கள் கட்டிப் பால் டின்னினை இலகுவாக திறக்கின்ற முறை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன் அவை கவர்ச்சிகரமாக தயார் செய்யப்பட்டு " ஹைலேன்ட் மில்க் மைய்ட்" என்று மீண்டும் பெயரிடப்பட்டுள்ளது. இந்த பண்புகள் நிறைந்த ஹைலேண்ட் மில்க் மைய்ட் 5 கி.கி. 5 பொதிகளடங்கிய இனிப்புப் பொருட்களிடையே மிகவும் பிரபல்யமடைந்து காணப்படுவதுடன் பாரிய மற்றும் சிறிய ஹோட்டல் உரிமையாளர்கள் அனேகமானவர்கள் உடனடியான மற்றும் ஊட்டச் சத்து நிறைந்த பால் தேனிரொன்றை தயார் செய்து கொள்வதற்கு எமது கட்டிப் பாலினை பயன்படுத்துகின்றனர்.

2011 ஆம் ஆண்டின் போது எமது கம்பனியால் பின்லாந்திலிருந்து யு.எச்.டி பால் உற்பத்தி இயந்திரம் இரண்டு தொடர்பாக முதலீடு செய்தல் இலங்கை பால் உற்பத்தியில் எடுத்து வைத்த பாரிய முன்னெடுப்பாகும். இந்த முதலீடு மூலம் இலக்கு வைத்திருப்பதாவது பால் மா உற்பத்தியை குறைத்து மக்களுக்கு மிகவும் போசாக்கு நிறைந்த திரவப் பாலினை உற்பத்தி செய்வதாகும். அரசாங்கத்தின் கொள்கையின் படி தற்பொழுது பழக்கப்பட்டுள்ள பால் மாவுக்குப் பதிலாக சகல வீடுகளிலும் திரவப் பாலினை பயன்படுத்துவதற்கு ஊக்கப்படுத்துவது எமது குறிக்கோளாகும்.
இந்த யு.எச்.டி இயந்திரங்கள் இரண்டில் ஒன்று எமது தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ளதுடன் தற்பொழுது திரவப் பால் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடுத்த இயந்திரம் எமது திகணையில் நிறுவப்பட உள்ளதுடன் இந்த இயந்திரங்கள் இரண்டிலிருந்தும் ஒரு மாத காலம் வரை பாதிப்படையாது அறை வெப்ப நிலையில் வைத்துக் கொள்ளக் கூடிய யு.எச்.டி திரவப் பால் எதிர் காலத்தில் நாடு பூராகவும் எந்த வொரு இடத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்குப் புறம்பாக, 2012 ஆம் ஆண்டின் போது, வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக எமது தொழிற்சாலையின் யோகட் மற்றும் ஐஸ்கிரிமை உற்பத்தி செய்வதற்கு நாம் திட்டங்களை தயார் செய்து கொண்டிருக்கின்றோம்.

இறுதியாக, இந்தத் தொழிற்சாலைக்கு உரிய உயர் முகாமையானது, சேவை செய்வதற்கு அர்பணித்துள்ள திறமையான ஊழியர் தொகுதியின் ஒத்துழைப்புடன் மில்கோ நிறுவனத்தின் மிக வெற்றிகரமான பிரிவு இந்த தொழிற்சாலையாக இருக்கும் என்று என்னால் குறிப்பிட முடியும்.

ஏ.வீ.ஆர். அபேசிங்க
தொழிற்சாலை முகாமையாளர் – பொலன்னறுவை.

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான மில்கோ (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை தொடர்பாக இந்த மீளாய்வினைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையினுள் நிலவுகின்ற அரசாங்கத்திற்கு உரிய ஒரே ஒரு பால் உற்பத்திக் நிறுவனமாக இருப்பது மில்கோ நிறுவனமாகும். எமது தொடர்ச்சியான முயற்சியாக இருப்பது பால் உற்பத்தி விவசாயிகளுக்கு நியாயமானது எனக் கருதத் தக்க விலையொன்றை அவர்களுடைய பால் தொடர்பாக செலுத்துவதுடன் இலங்கை மக்கள் தொடர்பாக போசாக்கு நிறைந்த உற்பத்திகளை மேற்கொள்வதாகும். எமது முக்கியமான குறிக்கோளாக இருப்பது இலங்கையில் போசாக்கு நிறைந்த உணவு மற்றும் குடிபான கம்பனிகளுக்கு மத்தியில் முதலாவது நிலையினை அடைவதாகும்.

இந்த வருடத்தின் போது பால் உற்பத்தி விவசாயிகள் தொடர்பாக செலுத்தப்பட்ட விலை இரண்டு முறை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பால் லீட்டர் ஒன்றிற்கு ரூ. 31.00 விலை ரூ. 35.00 வரை 10 மூ அதிகரிப்பொன்று 2010 ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி “மஹிந்த சிந்தனை “ செயற்பணியின் பிரகாரம் இந்தத் தொகை ரூ. 50.00 வரை அதிகரிக்கப்பட்டதுடன் அதன் வளர்ச்சி சதவீதமானது 42.85 மூ ஆகும். நடைமுறையில் தேசிய பால் சபையினால் மில்கோ நிறுவனம் வரை வரலாற்றில் உயர் வளர்ச்சிச் சதவீதமாக இது நிலைத்துக் காணப்படுகின்றது. அவ்வாறிருந்த போதும் அந்தக் நிறுவனம் மில்கோ நிறுவனம் அரசாங்கத்தின் கோரிக்கையான மக்களின் வாழ்வாதாரத்தினை நிலையான மட்டத்தில் வைத்துக் கொள்ளும் நோக்கில் நுகர்வு விலையினை அதிகரிக்காததுடன் இது தொடர்பான செலவினத்தில் ஒரு பகுதியினை அரசாங்கத்தினால் மீள் நிதியளிப்புச் செய்யப்பட்டு எஞ்சிய தொகையான ரூ. 81 மில்லியன் தொகை கம்பனியால் செலவு செய்யப்பட்டுள்ளது.

வருடத்தின் போது இரண்டு முறை பால் உற்பத்தி விவசாயிகளின் உற்பத்தி தொடர்பாக விலை அதிகரிப்புச் செய்யப்பட்டதன் விளைவாக எமது கம்பனியானது கிராமியப் பொருளாதாரத்திற்கு ரூ. 1,847 அதாவது முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 8.05 மூ ஆல் உயர் பங்களிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது. எனினும், 2010 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திற்கு பாதிப்பை ஏற்படுத்திய உக்கிர வெள்ளத்தின் காரணமாக பசும் பால் சேகரிப்பு 2.43 மூ சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

பால் உற்பத்தி விலைகளை உயர்த்துவதற்குப் மேலதிகமாக, கம்பனியின் பாற் கொள்வனவு மற்றும் அதனுடன் இணைவான துறையினை அபிவிருத்தி செய்தல், புதிய விவசாய முகாமைச் சங்கங்களை ஏற்படுத்தல் மற்றும் கொழும்பு, திகன, அம்பேவெல மற்றும் பொலன்னறுவை போன்ற இடங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு பசும் பாலைக் கொண்டு வருதல் தொடர்பாக வினைத்திறனான பவுசர் போக்குவரத்துப் வலையமைப்பு ஒன்றை அறிமுகம் செய்வதன் ஊடாக மேலும் விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதே போன்று அமைச்சு மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் விசேடமாக வேர்ல்ட் விசன் போன்றன ஊடாக நேரடி நிதி உதவியானது பால் உற்பத்தி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மில்கோ பால் உற்பத்தி விவசாய சமுக பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக எமது விவசாயிகளின் மற்றும் அவர்களுடைய குடும்பங்களில் அங்கத்தவர்கள் தொடர்பாக பாரிய பெறுபேறுகள் வழங்கப்பட்டு கருதத்தகு அளவில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிதி வருட இறுதியில் மில்கோ விவசாய சமுக பாதுகாப்பு நிதியம் முன்னேற்றம் அடைந்து உள்ளதுடன் அந்நிதியமானது ரூ. 41.5 மில்லியன் வரையான அளவால் அதிகரித்துள்ளது. அதன் அங்கத்துவமானது பால் உற்பத்தி விவசாயிகள் 56,090 பேரைக் கொண்டிருப்பதுடன் அவர்களுடைய ஒரு லீட்டர் பாலிற்கு 25 சதத்தினால் மற்றும் மில்கோ கம்பனியால் அந்த அளவிற்கு சமமான நிதிப் பங்களிப்புடன் 2003 / 2004 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விவசாய முகாமைச் சங்கங்கள் 1,805 இதன் கீழ் ஒன்று சேர்ந்துள்ளன.

**மேலே விளக்கப்படுத்தியுள்ள பால் உற்பத்தியுடன் தொடர்புடைய செலவினங்கள் கீழ் குறிப்பிட்ட பிரகாரமாகும்.**

| | 2010/11 ஆண்டு | 2009/10 | அதிகரிப்பு குறைவு | % |
|---|---|---|---|---|
| பால் நுகர்வு லீட்டர். ரூ. மி. | 53.19 | 54.52 | (1.33) | (2.43)% |
| கொள்வனவு விலை ( சராசரி) | 34.73 | 31.35 | 3.38 | 10.78% |
| பால் தொடர்பான கொடுப்பனவுகள் ரூ. மி. | 1,846.9 | 1,709.3 | 137.6 | 8.05% |
| குளிரூட்டல் செலவினம் ரூ. மி. | 295.3 | 273.2 | 22.10 | 8.08% |
| அபிவிருத்திச் செலவினம் ரூ. மி. | 138.6 | 135.9 | 2.10 | 1.54% |

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான மில்கோ (தனியார்) நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை தொடர்பாக இந்த மீளாய்வினைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையினுள் நிலவுகின்ற அரசாங்கத்திற்கு உரிய ஒரே ஒரு பால் உற்பத்திக் நிறுவனமாக இருப்பது மில்கோ நிறுவனமாகும். எமது தொடர்ச்சியான முயற்சியாக இருப்பது பால் உற்பத்தி விவசாயிகளுக்கு நியாயமானது எனக் கருதத் தக்க விலையொன்றை அவர்களுடைய பால் தொடர்பாக செலுத்துவதுடன் இலங்கை மக்கள் தொடர்பாக போசாக்கு நிறைந்த உற்பத்திகளை மேற்கொள்வதாகும். எமது முக்கியமான குறிக்கோளாக இருப்பது இலங்கையில் போசாக்கு நிறைந்த உணவு மற்றும் குடிபான கம்பனிகளுக்கு மத்தியில் முதலாவது நிலையினை அடைவதாகும்.

இந்த வருடத்தின் போது பால் உற்பத்தி விவசாயிகள் தொடர்பாக செலுத்தப்பட்ட விலை இரண்டு முறை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பால் லீட்டர் ஒன்றிற்கு ரூ. 31.00 விலை ரூ. 35.00 வரை 10 மூ அதிகரிப்பொன்று 2010 ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி "மஹிந்த சிந்தனை " செயற்பணியின் பிரகாரம் இந்தத் தொகை ரூ. 50.00 வரை அதிகரிக்கப்பட்டதுடன் அதன் வளர்ச்சி சதவீதமானது 42.85 மூ ஆகும். நடைமுறையில் தேசிய பால் சபையினால் மில்கோ நிறுவனம் வரை வரலாற்றில் உயர் வளர்ச்சிச் சதவீதமாக இது நிலைத்துக் காணப்படுகின்றது. அவ்வாறிருந்த போதும் அந்தக் கம்பனி மில்கோ நிறுவனம் அரசாங்கத்தின் கோரிக்கையான மக்களின் வாழ்வாதாரத்தினை நிலையான மட்டத்தில் வைத்துக் கொள்ளும் நோக்கில் நுகர்வு விலையினை அதிகரிக்காததுடன் இது தொடர்பான செலவினத்தில் ஒரு பகுதியினை அரசாங்கத்தினால் மீள் நிதியளிப்புச் செய்யப்பட்டு எஞ்சிய தொகையான ரூ. 81 மில்லியன் தொகை கம்பனியால் செலவு செய்யப்பட்டுள்ளது.

வருடத்தின் போது இரண்டு முறை பால் உற்பத்தி விவசாயிகளின் உற்பத்தி தொடர்பாக விலை அதிகரிப்புச் செய்யப்பட்டதன் விளைவாக எமது நிறுவனமானது கிராமியப் பொருளாதாரத்திற்கு ரூ. 1,847 அதாவது முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 8.05 % ஆல் உயர் பங்களிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது. எனினும், 2010 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திற்கு பாதிப்பை ஏற்படுத்திய உக்கிர வெள்ளத்தின் காரணமாக பசும் பால் சேகரிப்பு 2.43% சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

பால் உற்பத்தி விலைகளை உயர்த்துவதற்குப் மேலதிகமாக, நிறுவனத்தின் பால் கொள்வனவு மற்றும் அதனுடன் இணைவான துறையினை அபிவிருத்தி செய்தல், புதிய விவசாய முகாமைச் சங்கங்களை ஏற்படுத்தல் மற்றும் கொழும்பு, திகன, அம்பேவெல மற்றும் பொலன்னறுவை போன்ற இடங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு பசும் பாலைக் கொண்டு வருதல் தொடர்பாக வினைத்திறனான பவுசர் போக்குவரத்துப் வலையமைப்பு ஒன்றை அறிமுகம் செய்வதன் ஊடாக மேலும் விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதே போன்று அமைச்சு மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் விசேடமாக வேர்ல்ட் விசன் போன்றன ஊடாக நேரடி நிதி உதவியானது பால் உற்பத்தி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மில்கோ பால் உற்பத்தி விவசாய சமுக பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக எமது விவசாயிகளின் மற்றும் அவர்களுடைய குடும்பங்களில் அங்கத்தவர்கள் தொடர்பாக பாரிய பெறுபேறுகள் வழங்கப்பட்டு கருதத்தகு அளவில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிதி வருட இறுதியில் மில்கோ விவசாய சமுக பாதுகாப்பு நிதியம் முன்னேற்றம் அடைந்து உள்ளதுடன் அந்நிதியமானது ரூ. 41.5 மில்லியன் வரையான அளவால் அதிகரித்துள்ளது. அதன் அங்கத்துவமானது பால் உற்பத்தி விவசாயிகள் 56,090 பேரைக் கொண்டிருப்பதுடன் அவர்களுடைய ஒரு லீட்டர் பாலிற்கு 25 சதத்தினால் மற்றும் மில்கோ கம்பனியால் அந்த அளவிற்கு சமமான நிதிப் பங்களிப்புடன் 2003 / 2004 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விவசாய முகாமைச் சங்கங்கள் 1,805 இதன் கீழ் ஒன்று சேர்ந்துள்ளன.

**மேலே விளக்கப்படுத்தியுள்ள பால் உற்பத்தியுடன் தொடர்புடைய செலவினங்கள் கீழ் குறிப்பிட்ட பிரகாரமாகும்.**

| | 2010/11 ஆண்டு | 2009/10 | அதிகரிப்பு குறைவு | % |
|---|---|---|---|---|
| பால் நுகர்வு லீட்டர். ரூ. மி. | 53.19 | 54.52 | (1.33) | (2.43)% |
| கொள்வனவு விலை ( சராசரி) | 34.73 | 31.35 | 3.38 | 10.78% |
| பால் தொடர்பான கொடுப்பனவுகள் ரூ. மி. | 1,846.9 | 1,709.3 | 137.6 | 8.05% |
| குளிரூட்டல் செலவினம் ரூ. மி. | 295.3 | 273.2 | 22.10 | 8.08% |
| அபிவிருத்திச் செலவினம் ரூ. மி. | 138.6 | 135.9 | 2.10 | 1.54% |

| வருடம் | மொத்த இலாபம் ரூ.மி | நிகர இலாபம் ரூ.மி |
|---|---|---|
| 2006/07 | 257 | 18 |
| 2007/08 | 452 | 104 |
| 2008/09 | 731 | 332 |
| 2009/10 | 697 | 301 |
| 2010/11 | 537 | 83 |

செலவினத்தில் கீழ் உள்ள அதிகரிப்பு மீளாய்விற்கு உரிய வருடத்தில் நிறுவனத்தின் நிகர இலாபத்தை குறைத்துக் கொள்வதற்கு காரணமாக அமைந்துள்ளது.

| | 2010/11 ரூ.மி | 2009/10 ரூ.மி | அதிகரிப்பு |
|---|---|---|---|
| விளம்பர மற்றும் விற்பனை மேம்பாடு | 27.9 | 17.4 | 10.5 |
| தே.க.எ. வரிச் செலவினம் | 130.9 | 120.3 | 10.6 |
| சட்ட மற்றும் தொழிற்பயிற்சிக் கட்டணம் | 4.3 | 3.1 | 1.2 |
| கணக்காய்வுச் சேவைகள் | 1.8 | .4 | 1.4 |
| பணிப்பாளர்களின் படிகள் | 8.6 | 4.3 | 4.3 |
| **பதவியணியினர் செலவினங்கள்** | | | |
| சம்பளம், படி மற்றும் தொடர்பான செலவினங்கள் | 550.4 | 473.9 | 76.5 |
| ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.பொ.நி | 35.4 | 28.3 | 7.1 |
| பயன் திட்டக் கிரயம் - பணிக்கொடை | 76.6 | 21.6 | 55.0 |

மேலும், பொல்கஹவலயில் அமைந்துள்ள கால்நடை உணவுத் தொழிற்சாலை மற்றும் காலியில் அமைந்துள்ள தயிர்த் தொழிற்சாலையில் ஏற்பட்ட கீழ் குறிப்பிட்ட நட்டங்கள் கம்பனியின் நிகர இலாபத்தினை குறைப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

| | 2010/11 | 2009/10 | வீழ்ச்சி |
|---|---|---|---|
| கால்நடை உணவுத் தொழிற்சாலை ( நட்டம்) | (23.3) | (16.8) | (6.5) |
| தயிர்த் தொழிற்சாலை ( நட்டம்) | (2.3) | (1.8) | (0.5) |
| நிகர நட்டம் | (25.6) | (18.6) | (7.0) |

நிறுவனத்தின் நிகர இலாபம் இ.ஏ.சபை உடன்படிக்கையின் கீழ் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன் நிகர இலாபத்தில் குறைக்கின்ற பகுதி நிதிச் சந்தையில் மொத்த பொருளாதார கொள்கைகளில் மாற்றங்கள் ஊடாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

| | 2010/11 | 2009/10 | வீழ்ச்சி |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 83.6 | 88.4 | (4.8) |
| பரிமாற்று இலாபம் ( நட்டம் ) | (15.2) | (4.8) | (10.4) |
| நிகர இலாபம் | 68.4 | 83.6 | (15.2) |

**முடிவு**

இறுதியாக, நான் இந்த வருடத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக அமைச்சு மற்றும் பணிப்பாளர் சபையின் ஊடாக வழங்கியுள்ள ஒத்துழைப்புக்கள், உற்சாகப்படுத்தல் மற்றும் ஆலோசனைகளை வெகுவாக ஆதரிக்கின்றேன். அதே போன்று சகல முகாமைத்துவத்திற்கும் மற்றும் அவர்களுடைய பணிப்பாளர் சபையிற்கு இந்த வருடத்தின் போது சேவையிற்கு அர்பணிப்புச் செய்தமை தொடர்பாக நன்றியை தெரிவிப்பதற்கு இந்தச் சந்தர்பத்தை நான் உபயோகித்துக் கொள்கின்றேன்.

நிதிக் கூற்றுக்களை தயார் செய்து சமர்ப்பிப்பது தொடர்பாக காட்டிய அர்பணிப்பு தொடர்பாக நிதிப் பிரிவின் பதவியணியினர்களுக்கு, நிறுவனம் கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு முறையினை மேம்படுத்தியமை தொடர்பாக வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக மிகவும் குறுகிய கால எல்லையினுள் கணக்காய்வுக் கணக்குகளை சமர்ப்பித்தமை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வாளர்களான எஸ்ஜேஎம்எஸ் நிறுவனத்திற்கு இறுதியாக வெளியக கணக்காய்வாளர்களான பீடிஓ பாட்னர்ஸ் ஆகியோர்களுக்கு எனது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சீ. மடுகல்ல**
**நிதிக் கட்டுப்பாட்டாளர்**

**பணிப்பாளர்களின் அறிக்கை**
மில்கோ (பிரை) லிமிடட்டின் பணிப்பாளர்கள் 2011 மார்ச்சு 31ஆம் திகதியில் முடைவடையும் ஆண்டுக்கான தனது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றினையும் மற்றும் தனது அறிக்கையினையும் சமர்ப்பிப்பதில் பெருமிதம் கொள்கின்றனர்.

**பிரதான செயற்பாடு**
புதிய பாலை சேகரித்தல், பதப்படுத்தல், பொதிசெய்தல், விநியேகித்தல் மற்றும் பால் உற்பத்திகளை சந்தைப்படுத்தல் ஆகிய நிறுவனத்தின் இவ் ஆண்டுக்கால பிரதான செயற்பாடுகளாகவிருந்தன.

**வியாபார மீளாய்வு**
தவிசாளர், பிரதித் தவிசாளர், தொழிற்பாட்டுப் பணிப்பாளர் மற்றும் நிதி சேகரிப்பாளர் போன்றோரின் மீளாய்வானது அறிக்கையை முழுமைப்படுத்துவதாக அமைவதோடு, 2011.03.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிறுவனத்தின் செயற்பாடுகளை விரிவாக விபரிப்பதாகவும் அமைகின்றது, அத்தோடு நிறுவனத்தின் விவகாரங்கள் தொடர்பில் நியாயமான முறையிலான மீளாய்வினையும் அது கொண்டுள்ளது.

**ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்**
நிறுவனத்தின் ஆதம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பில் இவ்வாண்டுக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சேர்க்கைகள் ரூபா. 188.1 மில்லியனாவதோடு, தேய்மானக் கட்டணங்களும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

**பணிப்பாளர்கள் சபை**
கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு புதிதாக அமைக்கப்பட்ட பின்னர் 2010 மே 13ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வண்ணம் பின்வரும் புதிய பணிப்பாளர் சபையானது திறைசேரிச் செயலாளரினால் நியமிக்கப்பட்டது.

திரு. சுனில் சந்திர சில்லபன **விக்கிரமசிங்க** – தவிசாளர்
திரு. கன்கனம்கே சஞ்சயா **லீலரத்தின** - பிரதித் தவிசாளர்
திரு. முகம்மது நௌஷாட் **ஜுனைதீன்** - தொழிற்பாட்டுப் பணிப்பாளர்
திரு. ராஜு **சிவராமன்** - பணிப்பாளர் எம்.எஸ்.சி. (தொல்பொரு.) எப்.ஐ.ஏ. (இலங்கை)
திரு. செல்வத்துரை **லொகநாதன்** - பணிப்பாளர் எப்.சீ.எம்.ஏ. (ஐ.இ) எப்.எஸ்.சீ.எம்.ஏ. (இலங்கை)
திரு. அஜித் **திஸ்ஸாநாயக்க** – பணிப்பாளர் (பி.எச்.டி)
திரு. திலங்க **வீரசிங்க** – பணிப்பாளர் சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, சத்தியப் பிரமாண ஆணையாளர்.
திரு. அரினேஸராஜா **ஷக்திவேல்** - பணிப்பாளர் விவசாயப் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா : பொரு. (ஐ.இ) இளமாணிப் பட்டம் (மிருக வைத்.) பேராதனிய.
திரு. இரத்னதிலக **லேகம்கே** – பணிப்பாளர்

பின்வரும் பணிப்பாளர்கள் சபையானது புதிய அமைச்சு மாற்றம் காரணமாக, 2010 மே 10ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் இராஜினாமாச் செய்தது.

திரு. குமார் **அபேசிங்க** – தவிசாளர்
திரு. என்.எம்.கே.பி.எம். **நவரத்ன** – பிரதித் தவிசாளர்
திரு. றூமி **ஜௌபர்** - தொழிற்பாட்டுப் பணிப்பாளர்
திரு. டபிள்யு.டி.பீ. **பொன்சேகா** – பணிப்பாளர்
திரு. டி. **வெங்கடேஸ்வரன்** - பணிப்பாளர்
திரு. சி.பி. **ஹெரத்** - பணிப்பாளர்
திரு. எஸ்.ஐ.எம்.எம். **நஸ்வர்** - பணிப்பாளர்
திருமதி. எம். அனோமா நந்தினி **ஜயமஹா** – பணிப்பளர்

2010 மே 13ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வண்ணம் புதிய சபை அமைக்கப்பட்ட பின்னர், பின்வரும் இரண்டு பணிப்பாளர்கள் 2010 டிசம்பர் 21ஆம் திகதி முதல் செயற்படும் வண்ணம் இராஜினாமாச் செய்தார்கள்.

திரு. அரினேசராஜா **ஷக்திவேல்**
திரு. இரத்தினத்திலக **லெகம்கே**

சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் பின்வருமாறு
திரு. தானுகா **டிக்வெல்ல** 2010.12.21 முதல்
திரு. தஷிகா **எட்வாட்** (ஆங்கிலததில் பட்டம்) 2011.01.12 முதல்

**தகவல்கள் பகிர்வு**
மீளாய்வு ஆண்டு முழுவதற்குமான நிறுவனத்தின் குறிப்பிடப்பட்ட மூலதனங்கள் முறையே ரூபா. 500 மில்லியன் மற்றும் ரூபா. 319.4 மில்லியனாகும்.

**ஒதுக்கங்கள்**
வரி செலுத்தப்பட்ட பின்னர் நடப்பு ஆண்டின் இலாபம் ரூபா. 83,191,550 இற்கு சீராகக்கப்பட்ட முன் கொண்டுவரப்பட்ட ஒட்டுமொத்த இலாபமான ரூபா. 1,108,087,428 ஆனது கணக்குகள் தொடர்பான பக்கம் 3 இல் வழங்கப்படுகின்றது. ஒதுக்கங்கள் ரூபா. 25,000,000 தொகையான மூலதன ஒதுக்கத்தையும் இவ் ஆண்டு இறுதி வரைக்கான ரூபா. 1,689,978 ஐ கடன் தீர் நிதியையும் உள்ளடக்குவதோடு, நிதியத்தின் நோக்கம் மற்றும் அதன் விபரங்கள் கணக்குகளின் 17.1 மற்றும் 18 ஆம் குறிப்புக்களில் வழங்கப்படுகின்றன.

**ஒப்பந்தங்கள் மீது பணிப்பாளர்களின் ஆர்வம்**
கணக்கின் 27.3 ஆம் குறிப்பின் கீழ் கொடுக்கப்பட்டவாறும் மற்றும் விபரிக்கப்பபட்டுள்ளவாறும் நிறுவனத்தினுடனான எந்தவொரு ஒப்பந்தங்களிலும் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டதில்லை.

**கூட்டுறவு ஆளுகை**
பணிப்பாளர்கள் சபையானது சிறந்த கூட்டுறவு ஆளுகையினை உறுதிசெய்கின்றது. செயலாற்றுகையானது கம்பனியின் குறிக்கோள்களுடன் இசைவுறுவதையும் மற்றும் பங்கீட்டுப்பாட்டாளர்களின் குறிக்கோள்கள், எதிர்பார்ப்புக்களுடன் இசைவுறுவதையும் உறுதிப்படுத்துவது பணிப்பாளர்கள் சபையின் கடமையாகும்.

**வரி விதிப்பு**
வட்டி வருமானத்திலிருந்து எழுகின்ற வருமான வரிப் பொறுப்பானது கணக்குகளின் 23ஆம் இலக்க குறிப்பின் கீழ் வழங்கப்படுகின்றது. தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் பேரிலான இலாபங்கள் 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்படுகின்றன.

**சட்டரீதியான கொடுப்பனவுகள்**
பணிப்பாளர்கள், அரசாங்கத்திற்கு வழங்க வேண்டிய மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நியதியத்திற்குரி சகல சட்டரீதியான கொடுப்பனவுகளையும் உரிய காலத்தில் சரியாகச் செலுத்தியுள்ளமை தொடர்பில் தமது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் திருப்தியடைகின்றனர்.

**இணக்கப்பாடு**
நிறுவனமானது இலங்கைக்கோ அல்லது வெறு எங்குமோ பிரயோகிக்கத்தகு சட்டங்களையோ அல்லது ஒழுங்குவிதிகளையோ மீறக்கூடிய எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை.

**ஐந்தொகை திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**
**தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு**
நிறுவனமானது அதன் எதிர்கால தொழிற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்குப் போதுமான வளங்களை கொண்ளுள்ளமை தொடர்பில் பணிப்பாளர்கள் சபையானது திருப்தியடைகின்றது. இக்கண்ணோட்டப் பார்வையில், நிறுவனத்தின் கணக்குகளை தயாரிப்பதில் தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருக் கருதுகைப் பிரயோகத்தினைத் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றோம்.

**கணக்காய்வாளர்களின் நியமனம்**
கணக்காய்வு தலைமை அதிபதி பீ.டி.ஓ. பாட்னர்ஸ் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தைப் பரிந்துரைத்துள்ளதோடு, திறைசேரியிலுள்ள அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், 2011.03.31ஆம் திகதி நிறைவடையும் ஆண்டுக்காக நிறுவனத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளர்களாக நியமிக்கப்பட்டது. பங்கீட்டுப்பாட்டாளர்களின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கணக்காய்வாளர்கள் தொடர்பான முறைசார் நியமனமானது இடம்பெற்றது.
பணிப்பாளர்கள் அறிந்தவரை, கணக்காய்வாளர்கள் அவர்களின் சுயாதீனத்தைப் பாதிக்கும் வகையில் அமையக்கூடியவாறான எந்தவொரு உறவையும் நிறுவனத்துடனோ அல்லது அதன் துணைக் நிறுவனங்களுடனோ கொண்டிருக்கவில்லை.

**சபையின் ஆணைப்படி**
ஒப்பம்
நிதிச்சேவைகள் மற்றும் வர்த்தக முகவராண்மைகள் (பிரைவட்) லிமிட்ட்
(பிரிவு/555/91)
இல. 28, றொஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு 7

மீளாய்வு வருடத்தின் போது மாதம் ஒன்றிற்கு ஒரு முறை என்ற அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் உரிய முறையில் நடைபெற்றுள்ளன. நிதிக் கட்டுப்பாட்டினை பேணிச் செல்லும் போதும் அந்தக் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்தும் போதும் நிறுவன திட்டங்கள் மற்றும் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மிக முக்கியமான விடயமாக இருப்பதுடன் இவை நிதி வருட ஆரம்பத்தில் சகல நிரல் முகாமையாளர்களின் ஆலோசனைகள் மற்றும் சபையின் அங்கிகாரத்துடன் தயார் செய்யப்பட்டுள்ளது.

மாதாந்த செயலாற்றுகை அறிக்கையினை கடந்த மாதத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு வரவு செலவுத்திட்டத்துடன் தொடர்பான மாதாந்த கூட்டத்தில் ஒழுங்கு முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையானது நிதி மற்றும் குறிக்கோள்களை நிறைவு செய்து கொள்ளும் பணிகளின் செயலாற்றுகையிற்கு உரிய காலத் தகவல்கள் வழங்கப்படுவதுடன் பணிப்பாளர் சபையிற்கு நிறுவனத்தின் இலாபம் மற்றும் நட்டம் தொடர்பில் வினைதிறனான முகாமைத்துவ தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு உதவி புரிகின்றது.

கணக்காய்வுக் குழு
பொதுத் திறைசேரி பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பணிப்பாளர் ஒருவரினால் கணக்காய்வுக் குழுவின் தலைவர் ஆக வர முடியும். மில்கோ (தனியார் ) நிறுவனத்தின் பணிப்பாளர் சபை பொதுத் திறைசேரி பிரதிநிதித்துவப்படுத்தாததுடன் குழு பணிப்பாளர்கள் இருவரின் மூலம் செயற்படுவதுடன் குழுவின் தலைவராக அவர்களில் ஒருவர் செயற்படுகின்றார். இந்தக் குழு சபையின் உப குழுவாக செயற்படுத்தப்படுவதுடன் சுயாதீன உணர்வுடன் செயற்படுகின்ற உள்ளக கணக்காய்வுப் பிரிவின் ஊடாக சேவை மேற்கொள்ளப்படுகின்றது.

வருடத்தின் போது எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் உள்ளக கணக்காய்வாளர்களாக செயற்படுகின்றனர். அதற்கு பிரதான அலுவகத்திற்குப் புறம்பாக கொழும்பு, அம்பேவெல, திகன தொழிற்சாலைகளின் வதிவிட அலுவலர்களுடன் செயற்படுகின்ற கிளை அலுவலகளும் உள்ளன.

உள்ளக கணக்காய்வாளர்களினால் தயார் செய்யப்படுகின்ற கணக்காய்வுத் திட்டங்கள் வருட ஆரம்பத்திலேயே கணக்காய்வுக் குழுவின் அங்கிகாரம் தொடர்பாக சமர்பிக்கப்படுவதுடன் இந்த திட்டத்தின் பிரகாரம் நடைமுறை வருடம் முழுவதும் உள்ளகக் கணக்காய்வினை பரீட்ச்சிப்புச் செய்யப்படும். கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக அவர்களுடைய கருத்துக்கள் மற்றும் பதில்களை தெரிந்து கொள்வதற்கு முதலாவதாக உரிய முகாமையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உடன் கலந்துரையாடப்படும். அந்த விடயங்களின் பிரகாரம் சுருக்க அறிக்கையொன்று தயார் செய்யப்படுவதுடன் புலனாய்வு மற்றும் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாக அவை கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். இந்தக் குழு ஒரு மாதத்திற்கு ஒரு முறை கூடும்.

**நிறுவன முகாமை**
நிறுவனம் பங்கு உரிமையாளர்களுக்கு நிறுவனத்தின் நிதி நிலைமை தொடர்பில் நியாயமானதும் சரியானதுமான பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் உரிய கணக்கு அறிக்கைகளைப் பேணிச் செல்லும் வகையில் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது. அதே போன்று அவர்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனி சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்படுகின்றமையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

கணக்காய்வுக் குழு பொதுவாக நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்கள் மூவர்களை கொண்டிருக்க வேண்டியதுடன் அவர்களில் ஒருவர் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியாக இருக்க வேண்டிய அங்கத்தவராக இருத்தல் கட்டாயமாகும். இந்த அங்கத்தவர் குழுவின் தலைவராகச் செயற்படுதல் வேண்டும். நடைமுறையில் மில்கோ (தனியார் ) நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது பொதுத் திறைசேரயின் அங்கத்தவரினை பிரதிநிதித்துவப் படுத்தாததுடன் குழு பணிப்பாளர்கள் இருவருடன் செயற்படுவதுடன் குழுவின் தலைவராக கீழ் கையொப்பமிடுகின்றவர்கள் பணியாற்றுகின்றனர்.

மீளாய்வு காலத்தின் போது ஒழுங்கு முறையான கூட்டங்கள் நடைபெற்றன. நிதிக் கட்டுப்பாட்டாளர், உதவி முகாமையாளர்கள் ( நிதி ) இருவர் மற்றும் உள்ளக கணக்காய்வு முகாமையாளர் ஊடாக சகல கூட்டங்களுக்கும் பங்குபற்றுகின்றனர். வெளியக கணக்காய்வு அலுவலர்கள் ஒரு கூட்டத்திற்கு சமுகமளித்துள்ளனர். தொழிற்சாலைகளின் தலைவர்களுக்கும் கம்பனியின் பிரிவுத் தலைவர்களும் கூட்டங்களுக்கு பங்குபற்றுவதற்கு அழைப்பு விடப்படுகின்றன.

வருடத்தின் போது நடைபெற்ற கூட்டங்களில் குழு உள்ளக கணக்காய்வு விசாரணைகள் மற்றும் மாதாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்து தொழிற்சாலை பிரதிநிதிகளினால் மற்றும் ஏனைய செயற்பாட்டு பிரதிநிதிகளினால் உள்ளக் கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் பரீட்சிக்கப்பட்டதுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் பிழைகளை சீர் செய்வதற்கும் மற்றும் மீண்டும் அந்த குறைபாடுகளை எதிர்காலத்தில் செய்யாமல் இருத்தல் தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று குழு உள்ளக கணக்காய்வு விசாரணைகள் மற்றும் விரைவான விடைகளை அனுப்புதல் தொடர்பாக அவற்றிற்கு உரிய பணிகள் பற்றி பதவியணியினர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

குழுவினால் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை பரிசீலனை செய்ததன் பின்னர் உள்ளக கணக்காய்வு அலுவலர்களுடன் கலந்துரையாடி நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைய-யினை இற்றைப்படுத்துவதற்கு தேவையான சிபாரிசுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் குழு வெளியக கணக்காய்வாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுகின்ற முகாமைத்துவ அறிக்கைகளை மீளாய்வு செய்து தலைவருக்கு, பிரதித் தலைவருக்கு, மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர்களுக்கு முகாமைத்துவ அறிக்கையில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களை பரீட்சித்து நிறுவனத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கு இந்த விடயங்கள் தொடர்பாக தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எஸ். லோகநாதன்
பதில் தலைவர் - கணக்காய்வாளர் குழு
மில்கோ (தனியார் ) நிறுவனம்

**1. நிதிக் கூற்றுக்கள் பற்றிய அறிக்கை**

நாங்கள் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஐந்தொகை மற்றும் வருமானக் கூற்றுக்கள், உரிமை மாற்றக் கூற்று, மற்றும் அன்றைய தினம் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப் பாய்ச்சற் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கங்கள் பக்கம் 05 தொடக்கம் 26 வரை, குறிப்பிடப்பட்டுள்ள வேறு விளக்கக் குறிப்புகளைக் கொண்ட வரையறுத்த மில்கோ தனியார் நிறுவனத்தின் 2010 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் வேளியக கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அவர்களுடைய அறிக்கையில் நிறுவனம் பற்றி பின்வரும் விடயங்கள் தொடர்பாக பொருத்தமான அபிப்பிராயத்தினை சமர்ப்பித்துள்ளனர்.

1) நிறையிட்ட சராசரியினை கணிப்பிடு செய்வதில் ஏற்பட்ட பிழையின் காரணமாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்க கிரயம் ரூபா. 7.5 மில்லியன் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.
2) பேரேட்டின் பிரகாரம் இடர் கடன் நிலுவை சம்பளம் தயார் செய்கின்ற முறைமையின் நிலுவை ரூபா. 12.5 மில்லியன் மாற்றம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளன.
3) போத்தல் மற்றும் பொதி செய் பொருட்களை பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பாக 31.4 மில்லியன் ரூபா பெறுமதியான நிலையான வைப்பினை அடையாளம் காண முடியாது போய் உள்ளது.

**2. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமையின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணைவாக இந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் நியாயமான விதத்தில் சமர்ப்பித்தல் முகாமையின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பு தொடர்பாக பிழைகள் மற்றும் மோசடிகள் காரணமாக உரயி கணக்கீட்டுக் கொள்கையினைத் தெரிவு செய்து கொள்ளும் போது மற்றும் தொடர்புபடுத்திக் கொள்ளும் போது உரிய சந்தர்ப்பத்தில் நியாயமானது என எண்ணுகின்ற கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயார் செய்யும் ஏற்படக் கூடிய கருதத் தகு பிழையான கூற்றுக்களிலிருந்து விடுபட்டு நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் நியாயமான வித்தில் சமர்ப்பித்தல் தொடர்பாக தொடர்புடைய உள்ளக் கட்டுபாடுகளை உருவாக்குதல், செயற்படுத்தல் மற்றும் அவற்றை சிறந்த வித்தில் பேணிச் செல்லல் என்பன உள்ளடங்குகின்றன.

**3. கணக்காய்வின் கணக்கீட்டு எல்லை மற்றும் அபிப்பிராயத்தின் அடிப்படை**

எமது பொறுப்பாக இருப்பது எமது கணக்காய்வுக் கருத்தின் படியான இந்த நிதிக் கூற்றின் படி கருத்தொன்றை வெளிப்படுத்துவதாகும். அத்தியாயம் 4.1 இல் கலந்துரையாடிய பிரகாரம் தவிர எம்மால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணைவாக எமது கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் தேவையாக இருப்பது நிதிக் கூற்றுக்களில் கருதத் தகு பிழைகள் நிதிக் கூற்றுக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது என நியாயமான தீர்ப்பினை பெற்றுக் கொள்வது தொடர்பாக எமது கணக்காய்வினை திட்டமிடுவதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்குமாகும்.

கணக்காய்வாளர் ஒருவரினால் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக சமர்ப்பிக்கின்ற பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்துகின்ற விடயங்களுக்கு ஏதுவாகின்ற சாட்சிகளை பரீட்சித்துப் பார்க்கும் மட்டத்தில் உள்ளடக்குதல் உள்ளடக்கப்படுகின்றது. அதே போன்று கணக்காய்வின் போது பயன்படுத்திய எடுக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முகாமையினால் எடுக்கப்படுகின்ற முக்கிய மதிப்பீடுகள், அதே போன்று முழுமையான நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பித்தல் தொடர்பாக கணிப்பீட்டிற்கு உள்ளடங்குகின்றது.

நாங்கள் 4.1 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தவிர, எமது கணக்காய்வின் குறிக்கோள் தொடர்பாக தேவையான சகல தகவல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் எமது உச்ச அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் பெற்றுக் கொண்டோம். அதன் காரணமாக எமது பொருத்தமான கருத்தினை பெற்றுக் கொள்வது தொடர்பாக நியாயமான அடிப்படை ஒன்றினை கணக்காய்வின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது என்று நாங்கள் நம்புகின்றோம்.

**4. கருத்து**

4.1 2011 மார்ச் 31 ஆம் திகதியில் ரூ. 347,851,960.00 பெறுமதியினைக் கொண்ட பௌதீக இருப்புத் தொகை பரீட்சிக்கப்படாததுடன் அவ்வாறு ஏற்பட்டது அந்தத் திகதி எம்மால் நிறுவனத்தின் கணக்காய்வுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதிக்கு முந்திய திகதியாக இருந்தமையினாலாகும். நிறுவனத்தின் இருப்புக்களில் கடந்த கால இணைக்கப்பாட்டு அறிக்கைகளுடன் ஒப்பீடு செய்யும் போது அறிக்கைகளின் தன்மைகளின் பிரகாரம் வேறு கணக்காய்வுச் செயற்பாட்டின் ஊடாக இருப்பு அளவுகள் பற்றிய எமக்கு திருப்தியடைய முடியவில்லை.

4.2 எமது பரீட்சிப்புக்களின் படி காட்டப்பட்டுள்ள பிரகாரம் எமது அபிப்பிராயத்தின் படி அது போன்ற சீராக்கங்களின் தாக்கங்களின்றி தேதைபாட்டின் படி தீர்மானிக்கப்பட்டிருக் ; மாயின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயம் 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி, நிறுவனம் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஆண்டு தொடர்பாக ஒழுங்கு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டுள்ளதுடன், கணக்கீட்டு அறிக்கைகளின் ஊடாக 2011 மார்ச் 31 ஆம் திகதியில் நிறுவனம் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான செயற்பணியை வெளிப்படுத்துவதாகவும் அத்தோடு இந்த இலாபம் மற்றும் நிதிப் பாய்ச்சல்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணைவாக உள்ளது என்று எங்களால் திருப்தியடைய முடியும்.

**5. வேறு சட்ட மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவை பற்றிய அறிக்கை.**

12. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 151 (2) ஆம் பக்கத்தின் குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் இந்த நிதிக் கூற்றுக்கள் இணங்குகின்றன.

BDO Partners

**பட்டயக் கணக்கறிஞர்கள்**
**கொழும்பு**
**2011 நவம்பர் 24 ஆம் திகதி**

| | Notes | 2010/2011<br>Rs. | 2009/2010<br>(மீளக்குறிப்பிட்டது)<br>Rs. |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 4,548,974,053 | 4,093,051,886 |
| விற்பனைக் கிரயம் | | (4,012,024,624) | (3,395,561,341) |
| மொத்த இலாபம் | | 536,949,429 | 697,490,545 |
| ஏனைய வருமானம் | 4 | 100,440,617 | 102,164,980 |
| | | 637,390,046 | 799,655,525 |
| நிருவாகக் கிரயம் | | (413,113,697) | (332,794,334) |
| விநியோகக் கிரயம் | | (66,130,740) | (100,074,952) |
| ஏனைய செலவினங்கள் | | (31,977,865) | (22,290,469) |
| நிதிக் கிரயம் | 5 | (15,504,264) | (5,771,044) |
| | | (526,726,566) | (460,930,799) |
| வரிக்கு முந்திய இலாபம் | 6 | 110,663,480 | 338,724,726 |
| வருமானவரிச் செலவினம் | 7 | (27,471,930) | (37,975,136) |
| ஆண்டுக்கான இலாபம் | | 83,191,550 | 300,749,590 |
| பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு | 8 | 3 | 9 |
| பங்கொன்றுக்கான பங்கிலாபம் | | | |
| இறுதி பங்கிலாபம் | 9 | - | 0.92 |

அடைப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் குறைப்புக்களைக் குறிப்பிடுகின்றன.

5 - 26 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் உள்ளா

24 மார்ச், 2011
கொழும்பு

# 2011 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை

| | குறிப்புக்கள் | 31.03.2011<br>உள்ளவாறு<br>ரூ. | 31.03.2010<br>உள்ளவாறு<br>(மீளக்குறிப்பிட்டது)<br>ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திரம் | 10 | 532,747,937 | 503,286,649 |
| மூலதன அறைகுறை வேலை | | 19,366,961 | 68,787,758 |
| | | 552,114,898 | 572,074,407 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| கால் நடைகள் | 11 | 1,431,645 | 444,255 |
| இருப்புக்கள | 12 | 347,851,960 | 527,206,176 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 13 | 895,480,728 | 777,229,208 |
| குறுங்கால முதலீடுகள் | 14 | 930,623,649 | 722,597,533 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 15 | 394,346,782 | 368,024,946 |
| | | 2,569,734,764 | 2,395,502,118 |
| மொததச சொததுககள | | 3,121,849,662 | 2,967,576,525 |
| பங்கு முதலும் பொறுப்புக்களும் | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| பிரகடணப்படுத்திய மூலதனம் | 16 | 319,454,060 | 319,454,060 |
| மூலதன ஒதுக்கங்கள் | 17 | 25,000,000 | 25,000,000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 336,454,462 | 336,454,462 |
| தேய்வு நிதி | 18 | 1,689,978 | 1,689,978 |
| நிறுத்திவைத்த வருமானங்கள் | | 1,191,278,978 | 1,108,087,428 |
| மொதத பஙகு முதல / ஒபபுரவு | | 1,873,877,478 | 1,790,685,928 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | | |
| வட்டி பொறுப்பேற்கப்படாத கடன்கள் மற்றும் பெறுகைக | 19 | 85,698,717 | 85,698,717 |
| வட்டி பொறுப்பேற்கப்பட்ட கடன்கள் | 19 | - | 423,240 |
| ஓய்வூதிய நன்மைப் பொறுப்புக்க்ள - பணிக்கொடை | 20 | 201,703,631 | 125,097,698 |
| நிறுத்தப்பட்ட அரச உதவுதொகைகள் | 21 | 20,757,825 | 22,567,086 |
| | | 308,160,173 | 233,786,741 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வியாபார மற்றும் எனைய சென்மதிகள் | 22 | 823,121,208 | 809,375,797 |
| வருமானவரிப் பொறுப்புக்கள் | 23 | 27,758,202 | 42,819,482 |
| குறுங்கால கடன் பெறுகைகள் | 19 | 423,240 | 4,677,604 |
| வங்கி மேலதிகப் பற்று | 24 | 88,509,361 | 86,230,973 |
| | | 939,812,011 | 943,103,856 |
| மொதத பஙகு முதல / ஒபபுரவு மறறும பொறுபபுககள | | 3,121,849,662 | 2,967,576,525 |

அடைப்புக்களுக்குள் உள்ளவை குறைப்புக்களைக் காட்டுகின்றன

அர்ப்பணிப்புக்களும் எதிர்பாராத நட்டங்களும் ***25 & 26***

5 - 26 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைக்ள மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் உள்ளார்ந்த

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் இந்த நிதிக் கூற்றுக்கள் காணப்படுகின்றன.

**நிதிசார் பிரதானி**

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்து வெளியிடுவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

சபை சார்பாக அங்கிகரிக்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது.

பணிப்பாளர் பணிப்பாளர்

**24 மார்ச், 2011**
**கொழும்பு**

| | பிரகாடணப்படுத்திய மூலதனம் ரூபா. | பங்கு முதல் ரூபா. | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா. | தேய்வு நிதி ரூபா. | நிறுத்திவைத்துள்ள உழைப்புக்கள் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| | | | | | (மீளக்குறிப்பிட்டது) | (மீளக்குறிப்பிட்டது) |
| **31.03.2009 இல் உள்ளாவாறு மீதி** | 306,500,020 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 836,699,281 | 1,506,343,741 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் ( குறி | - | - | - | - | 300,749,590 | 300,749,590 |
| பங்கு வழங்கல் ( குறிப்பு 30.3) | 12,954,040 | - | - | - | - | 12,954,040 |
| திரண்ட நிதிக்கு மாற்றிய தொகை. - பங்கிலாபம் மீள குறிப்பிட்டது 30.3) | - | - | - | - | (29,361,443) | (29,361,443) |
| **31.03.2010 இல் உள்ளவாறு நிலுவைக** | 319,454,060 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 1,108,087,428 | 1,790,685,928 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | 83,191,550 | 83,191,551 |
| 31.03.2011 இல் உள்ளவாறு நிலுவை | 319,454,060 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 1,191,278,978 | 1,873,877,478 |

5 - 26 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் உள்ளார்ந்த பகுதிகளாகக்

**கொழும்பு**
**24 மார்ச், 2011**

| | 31.03.2011 உள்ளவாறு ரூபா. | - 31.03.2010 (மீளக்குறிப்பிட்டது) ரூபா. |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிரிந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் | 110,663,480 | 338,724,726 |
| சீராக்கங்கள் : | | |
| - ஆதனம், பொறி மற்றும் உபகரண பெறுமானத்தேய்வு | 158,638,553 | 208,191,757 |
| - முதலீடுகளிலிருந்தான வருமானம் | (88,453,539) | (88,453,539) |
| - பொறி, இயந்திரம் மற்றும் உபகரண விற்பனை இலாபம் ( நட்டம் ) | - | (2,090,432) |
| - வட்டிச் செலவினங்கள் | 964,195 | 964,195 |
| - நிறுத்தி வைத்த நன்கொடைகள் மீதான அங்கிகரித்த வருமானம் | (9,669,546) | (583,453) |
| - இருப்புப் பதிவளிப்புக்கள் | 260,681 | 25,778 |
| - நாணய மாற்று நட்டங்கள் | 15,171,011 | - |
| - குறிப்பிட்ட நலன் திட்டத்திற்கான ஏற்பாடுகள் | 85,457,151 | 31,794,745 |
| | 162,368,505 | 149,849,051 |
| தொழிற்பாடு முதல மாற்றத்திற்கு முன்னர தொழிற்பாட்டு இலாபம் / நட்டம | 273,031,985 | 488,573,777 |
| இருப்புக்களின் (அதிகரிப்பு) குறைவு | 179,093,535 | (186,870,732) |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளின் (அதிகரிப்பு) குறைவு | (108,902,258) | (123,801,500) |
| வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளின் அதிகரிப்பு (குறை) | 13,745,411 | (4,567,806) |
| | 83,936,688 | (315,240,038) |
| ***செயற்பாடுகளிலிருந்து உருவாக்கிய காசு*** | 356,968,674 | 173,333,739 |
| செலுத்திய வட்டி | - | (964,195) |
| வரி செலுத்தியது | (42,533,303) | (24,909,378) |
| வரையறுத்த நன்மைத் திட்டக் கொடுப்பனவுகள் - பணிக்கொடை | (8,851,220) | (10,241,352) |
| | (51,384,523) | (36,114,925) |
| ***செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் ( பயன்படுத்திய*** | 305,584,151 | 137,218,814 |
| ***முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்*** | | |
| பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (112,835,181) | (172,971,880) |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திர கொள்வனவு நிர்மாணத் துறையில் முதலீடு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | (26,831,253) | - |
| பங்கிலாபம் செலுத்தியது | - | (29,361,442) |
| கிடைத்த வட்டி | 85,078,392 | 81,432,195 |
| குறுங்கால முதலீடுகள் | (223,197,127) | (8,063,846) |
| பொறி, ஆதனம் மற்றும் உபகரண விற்பனை வருமானம் | - | 2,394,598 |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படித்திய தேறிய காசு | (277,785,169) | (126,570,375) |
| நிதி செயற்பாட்டிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| குறுங்கால கடன் பெறுகைகள் தொடர்பான காசுப் பெறுகைகள் - ( தேறிய மீள் | 7,860,285 | 1,197,156 |
| குறுங்கால கடன்கள் மற்றும் பெறுகைகளிலிருந்தான தேறிய காசுப் பெறுகைகள் | (5,144,988) | (11,675,637) |
| பணிப்பாளர்கள் மற்றும் பங்குரிமையாளர்ளிடமிருந்தான கிடைப்பனவுகள் ( கொடுப்பனவுகள்) | | (4,055,619) |
| நிதி செயற்பாடுகளில்ல் பயன்படுத்திய தேறிய காசு | 2,715,297 | (14,534,100) |
| காசு மற்றும் காசுக்குச் சம்மானவைகளின் தேறிய அதிகரிப்பு / குறைவு | 30,514,279 | (3,885,661) |
| ஆண்டு ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவைகள் குறிப்பு 24 | 281,793,973 | 285,679,634 |
| ஆண்டு நிறைவில் காசும் காசுக்குச் சமமானவைகளும். குறிப்பு 24 | 305,837,421 | 281,793,973 |

அடைப்புக்களுக்குள் உள்ளவை குறைப்புக்களைக் காட்டுகின்றன

5 - 26 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் உள்ளார்ந

**24 மார்ச், 2011**

**கொழும்பு**

1. கூட்டுத் தகவல்கள்

1.1. பொது

வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) நிறுவனமானது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு இயங்கி வருகின்ற ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்புக் நிறுவனமாகும்.

**"கிரிய மில்க் இன்டஸ்ட்ரீஸ் ஒப் லங்கா ( பிரைவட்) லிமிடட்** " என்ற பெயரின் கீழ் 1996 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். 2001 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மில்கோ (பிரைவட்) லிமிடட் என இந்தக் நிறுவனத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் இந்திய தேசிய பண்ணை அபிவிருத்திச் சபை (NDDB) என்பவற்றுக்கிடையில் கைசாதிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வரை மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா நிறுவனத்திற்குச் உரித்துடையதும் பயன்படுத்தி வந்ததுமான சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ( கணனி தவிர ) மற்றும் மேற்படி திகதிவரை மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் நிறுவனத்திற்கு குத்தகை உரித்துடையதும் பயன்படுத்தி வந்ததுமான காணி மற்றும் கட்டிடங்கள் 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டன. கைமாற்றம் செய்யப்பட்ட நிகர சொத்துக்களின் பெறுமதி ரூபா 306,500,020/- ஆகும். மேலும், இலங்கை பொது தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் திதியிட்ட கடிதத்தின் பிரகாரம், குத்தகைக் காணிகள் மற்றும் கட்டடங்களின் வருடாந்த குத்தகைத் தொகை ரூபா 20,427,900/- தொகையை கூட்டு முயற்சி தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கைவிட்டுள்ளது. எனினும், கூட்டு முயற்சி உடன்படிக்கையானது நீண்ட காலம் அமுலில் இருக்கவில்லை, மேற் கூறப்பட்ட அரசாங்கக் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணக்குகளில் தேவையான திருத்தங்களை கம்பனி செய்திருக்கவில்லை.

இல. 7, வஜிர வீதி, கொழும்பு 05 என்ற முகவரியில் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளதுடன் தலைமை அலுவலகமும் அதே இடத்தில் அமைந்துள்ளது. இக் கம்பனியின் பாரிய தொழிற்சாலைகள் நாராஹேன்பிட்ட, அம்பேவல, திகன மற்றும் பொலன்னருவை போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ளன.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

ஆண்டின் போது, நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாவன பால் சேகரித்தல், பதனிடல், பொதி செய்தல் மற்றும் பால் உற்பத்திகளை கையாள்தலும் விநியோகம் செய்தலும்.

1.3 நிதிக் கூற்றுக்களை வெளியீடு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட திகதி

2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணைவாக 2011.மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2.1 பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கான அடிப்படை

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றுக்கு இணைவாக வரலாற்றுக் கிரய மதிப்பீட்டின் படியும் அட்டுறு கணக்கீட்டு அடிப்படையின் படியும் தயார் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களானது இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**2.1.2 இணக்கப்பாட்டுக் கூற்று**

2011 ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் உள்ள வாறு கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் ( நிதிக் கூற்றுக்கள் ) ஐந்தொகை, வருமானக் கூற்றுக்கள், ஒப்புரவு மாற்றக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் தேவைப்பாடுகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் கணக்கீட்டு நியமங்களுடன் பொருந்தும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ளன.

**2.1.3. தொடர்ந்து செல் எண்ணக்கரு**

நிறுவனமானது தொடர்ந்து இயங்கிச் செல்லும் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் பணிப்பாளர்கள் தமது மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளதுடன் நிறுவனத்தினை மூடிவிடுவதற்கோ அல்லது செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கோ எந்த எண்ணமும் இல்லை என அறிவித்துள்ளனர்.

**2.1.4. ஒப்பீட்டுத் தகவல்கள்**

நிறுவனத்தினால் கணக்கீட்டுத் தகவல்கள் நிலையாகப் பிரயோகிக்கப்பட்டு வருவதுடன் முன்னைய வருட செயற்பாடுகளுடன் நிலையாகவும் காணப்படுகின்றன. கணக்கீட்டுக் கூற்றுக்களுக்கான குறிப்பு 30 இல் குறிப்பிட்டுள்ள பிரகாரம், நடை முறையாண்டு நிதிக் கூற்றுக்களை வெளியீடு செய்வதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தேவையான இடங்களில் முன்னைய வருடத்துடன் தொடர்பான தொகைகள் மற்றும் சொற் பிரயோகங்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**2.1.5. கழிவீட்டு தொழிற்பாடுகள்**

நிறுவனத்தின் தொழிற்பாட்டில் கழிவீட்டு நடவடிக்கையானது தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு விடயமாகக் காணப்படுவதுடன் அது தனிப்பட்ட திட்டம் ஒன்றிற்கு ஏற்ப நிறுத்தப்பட்டு அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ளது அத்துடன் இது நிறுவனத்தின் பிரத்தியேகமான பாரிய கைத்தொழில் அல்லது பௌதீக பரப்பாகவும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது.

2.1.6. வெளிநாட்டு நாணய பரிமாற்றம்

சகல வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன. இது கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த சந்தர்பத்தில் நிலவிய நாணயமாற்று வீதத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டது.

வருட முடிவில் குறிப்பிட்ட சந்தர்ப நாணய மாற்றுவீத்ததைப் பயன்படுத்தி வெறிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டிருந்த நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை ரூபாவிற்கு நாணய மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

நாணயமல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அச்சந்தர்பங்களில் நிலவிய நாணயமாற்று வீத்திற்கு ஏற்ப பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன. பெறுமதிகள் தீர்மானிக்கப்பட்ட போது எழுந்த இலாப நட்டங்கள் வருமானக் கூற்றுக்களில் கணக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளன.

**2.1.7 மூலப் பொருட்கள் மற்றும் ஒதுக்கங்கள்**

பொதுவான விடயங்களின் சகல மூலப் பொருட்களும் நிதிக் கூற்றுகளில் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரே வகையற்ற வகையான விடயங்கள் அல்லது பணிகள் அவை முக்கியத்துவம் அற்றதாயின் மாத்திரம் அன்றி வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளன.

**2.1.8 விசேடத்துவமான கண்க்கீட்டுத் தீர்மானங்கள், மதிப்பீடுகள், மற்றும் எடுகோள்கள்**

(அ) தீர்மானம்

கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்திக் கொள்ளும் செயற்பாட்டின் போது முகாமைத்துவத்தினால் நிதிக் கூற்றுக்களின் ஊடாக அடையாளம் காணப்பட்ட தொகைகளின் படி விசேடமான தாக்கங்கள் உள்ள மதிப்பீடுகளை மேற்கொள்ளல் தவிர கீழ் உள்ள தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

முகாமைத்துவத் தீர்மானம் எடுத்தலுக்கு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அறிக்கையிடப்பட்ட அளவு மற்றும் அறிக்கையிடப்பட்ட திகதிகளில் வழமைக்கு மாறான பொறுப்புக்கள் பற்றி வெளிப்படுத்துவதற்கு தாக்கத்தை செலுத்துகின்ற மதிப்பீடகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை தயார் செய்தல் இன்றியமையாததாகும்.

எதிர்காலத்திற்குப் பொருத்தமான வகையில் பிரதான எடுகோள்கள் மற்றும் எதிர் வரும் நிதி ஆண்டின் போது கொண்டு வரப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொகையிற்கு மூலப் பொருள் ரீதியான சீராக்கங்களின் காரணமாக இருக்கின்ற விசேடமான ஆபத்துக் காணப்படுகின்ற ஐந்தொகைகத் திகதிக்கு அதி விசேட ஏனைய பிரதான வளங்களை மதிப்பீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2.2. சொத்து மதிப்பீடும், மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்திய அடிப்படையும்.

**2.2.1. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

**அ) கிரயம்**

ஆதனம், பொறி மற்றும் இயந்திரங்கள் திரண்ட பெறுமானத் தேய்வினை நீக்கியதும் பெறுமதி வீழ்ச்சிகள் என்பன கவனத்திற் கொள்ளப்பட்ட பெறுமதி கிரய விலையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆ) கிரயம் மற்றும் மதிப்பீடு

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் திரண்ட பெறுமானத் தேய்வினைக் கழித்த பின்னரான கிரயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே வேளை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது உரிய ஆதனங்கள் தொடர்பான முழுமையான ஆதன வகுப்பு முழுமையாக மதிப்படு செய்யப்பட்டுள்ளன.

**(இ) பெறுமானத் தேய்வு**

சகல ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி அல்லது கிரயம் என்பவற்றின் அடிப்படையில் நேர் கோட்டு முறையினைப் பயன்படுத்தி அச்சொத்துக்கிளின் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் பதிவளிப்புச் செய்யய்பப்பட்டுள்ளது.

நிதிக் குத்தகையின் கீழ் உள்ள சொத்துக்களின் பெறுமானத் தேய்வினை மேற்கொள்ளும் போது குத்தகைக் காலத்தின் குறைந்த காலப் பகுதியின் அடிப்படையில் அல்லது அதை ஒத்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தின் படியும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது.

காணி தவிர்ந்த சகல ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தின் படி நேர் கோட்டு முறையினைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் கணக்கிடப்பட்டுள்ளதுடன் பெறுமானத் தேய்வுகளை பதிவளிப்பதற்காக பின்வருமாறு ஆயுட்காலங்கள் மதிப்பிடப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கட்டிடங்கள் 20 வருடங்களுக்கு மேல் | |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 06 வருடங்களுக்கு மேலிருந்து 10 வருடங்கள் வரை |
| தளபாடங்கள மற்றும் பொறுத்துக்கள் | 03 வருடங்களுக்கு மேலிருந்து 05 வருடம் வரை |
| ஆய்வு கூட உபகரணம் | 03 வருடங்களுக்கு மேலிருந்து 05 வருடம் வரை |
| மோட்டார் வாகனங்கள் | 02 வருடங்களுக்கு மேல் 04 வருடங்கள் வரை |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 03 வருடங்களுக்கு மேல் 10 வருடம் வரை |
| அலுவலக உபகரணம் | 2.5 வருடங்களுக்கு மேல் 05 வருடங்கள் வரை |
| போத்தல்கள் மற்றும் கிரேட்ஸ் | 04 வருடங்களுக்கு மேல் |
| கணனிகள் | 02 வருடங்களுக்கு மேல் 04 வருடங்கள் வரை |
| போத்தல் குளிராக்கி | 2.5 வருடங்களுக்கு மேல் 04 வருடங்கள் வரை |
| மென்பொருள் 03 வருடங்களுக்கு மேல் | |
| பாற் பேணிகள் 05 வருடங்களுககு | |

சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்தல் அவை பயன்பாட்டுக்கு எடுக்கும் சந்தர்பத்திலிருந்தே ஆரம்பமாவதுடன் சொத்துக்களை விற்பனை செய்தல் தொடர்பாக வகைப்படுத்தப்பட்ட திகதிக்கு மற்றும் சொத்தினை பயன்பாட்டுக்கு எடுக்காத திகதிக்கு முன்னய திகதி முடிவடையும்.

சொத்தின் பெறுமானத் தேய்வு கழித்த பெறுமதி, பயன்படு காலம் மற்றும் பெறுமானத் தேய்வு செய்யும் முறைமை போன்றவற்றை மீள மீளாய்வு செய்யப்படுவதுடன் தேவையாயின் ஒவ்வொரு வருடத்தின் போது சீராக்கங்களும் மேற்கொள்ளப்படும்.

**(இ) மீள் நிலைப்படுத்தல் கிரயம்**

செயலாற்றுகையின் ஆரம்ப மதிப்பீடு செய்த பெறுமதியிலிருந்து எதிர்பார்த்த பொருளாதார கொள்கை மீள் சீர்திருத்தம் அல்லது பேணிச் செல்லல் தொடர்பாக ஆதனம், பொறி மற்றும் உபகரணத் திருத்தம் அல்லது பராமரிப்புச் செய்தல் தொடர்பான செலவினங்களை மேற்கொள்கின்ற சந்தர்பத்தில் செலவினங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

**(ஈ) பயன்படுத்த இயலாதது என அடையாளம் காணல்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிலிருந்து ஏதேனும் ஒன்றை நீக்குதல் அல்லது அவற்றினை பயன்பாட்டிலிருந்து அப்புறப்படுத்துவதன் ஊடாக எதிர்கால பொருளாதார பயன்களை எதிர்பார்க்கின்ற முடியாத போது பயன்படுத்த முடியாது என அடையாளம் காணப்படும். சொத்து ஒன்று பயன்படுத்தப்பட முடியாதது என அடையாளம் காணப்பட்ட பிரகாரம் ஏற்படுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டத்தினை அப்புறப்படுத்தும் நிகர கிடைப்பனவு மற்றும் எதிர்காலத்திற்கு கொண்டு சென்ற பெறுமானத்திற்கு இடையேயான வித்தியாசமாக சேர்த்துக் கொள்ளப்படும்.

**2.2.2. குத்தகைகள்**

**அ) நிதிக் குத்தகை – கம்பனியானது குத்தகை பெறுனராக இருக்கின்ற போது**

உரிமையாண்மைக்குப் புறம்பாக நிகழ்கின்ற சகல ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை சிறந்த முறையில் மாற்றியமைக்கக் கூடிய வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குத்தகை நிதிக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. நிதிக் குத்தகை ஒன்றின் ஊடாக பெற்றுக் கொண்ட சொத்துக்கள் அவற்றின் நியாயமான பெறுமதியிலும் பார்க்க குறைந்த பெறுமதிக்கு சமமான பெறுமதியால் அல்லது திரண்ட பெறுமானத் தேய்வுகள் மற்றும் திரண்ட குறைந்து செல்லும் ஆபத்துக்களுக்குக் குறைவான ஆரம்பத்தில் குறைந்த குத்தகை செலுத்துகையின் தற்பொழுதைய பெறுமதிக்கு கணக்கிடப்படும்.

வரி உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய அதை ஒத்த ஆரம்பப் பெறுமதி பொறுப்பொன்றாக காட்டப்படும். எதிர்கால நிலைமை தொடர்பாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிதிக் கட்டணங்கள் குறிப்புக்களில் வெவ்வேறாக தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிதி ஆண்டுக்கும் உரியதான முன்னைய பொறுப்பு வட்டிக்கு ஒவ்வொரு காலம் தொடர்பாக நிகழ்கின்ற செலவு மீதிகளின் மீது நிலையான கால அடிப்படையிலான வட்டி வீத்தினை ஏற்படுத்துவதற்கு மட்டுமல்லாது குத்தகைக் காலம் முழுவதும் வருமானக் கூற்றிலிருந்து அறவிடப்படும்.

குத்தகை ஆதனம் அல்லது அதன் மேம்பாடுகளுடன் தொடர்பான கிரயங்கள் மூலதமாக்கப்படுவதுடன் குத்தகை முழுமையடையாத காலம் அல்லது மேம்படுத்தியமையினால் மதிப்பிடப்பட்ட பயன்படுத்தக் கூடிய ஆயுட் காலம் ஆகிய இரண்டில் குறைந்த காலத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்படும்.

நிதிக் குத்தகையினால் ஏற்படுகின்ற விற்பனை அல்லது குத்தகைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான சொத்துக்களை முன்கொண்டு சென்ற பெறுமதிக்கு ஏதேனும் விற்பனை மிகையொன்று குத்தகைக் காலம் பூராகவும் ஒதுக்கப்பட்டு சீர் செய்யப்படும்.

**ஆ) தொழிற்பாட்டுக் குத்தகை**

குத்தகைக் காலத்தின் கீழ் சொத்துக்கள் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை உரிய முறையில் குத்தகைதாரர் வினைத்திறனாக மேற்கொள்கின்ற குத்தகை தொழிற்பாட்டுக் குத்தகை என்று வகைப்படுத்தப்படும்.

தொழிற்பாட்டுக் குத்தகையின் கீழ் செலுத்தப்படுகின்ற குத்தகைக் கொடுப்பனவுகள் ( காப்புறுதி மற்றும் பராமரிப்பு போன்ற சேவைக் கிரயம் உள்ளடங்கலாக ) எளிய முறையின் அடிப்படையில் குத்தகைக் காலம் பூராகவும் வருமானக் கூற்றில் செலவொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

**2.2.3 சொத்துக்கள் குறைவடைதல்**

ஏதேனும் ஒரு சொத்து தேய்வடையக் கூடிய தன்மையுள்ளதா என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு நிறுவனமானது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதிக்கும் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. அவ்வாறான நிலைமை காணப்படுமாயின் அல்லது ஏதேனும் ஒரு சொத்து தொடர்பாக வருடாந்த தேய்வு தொடர்பான பரீட்ச்சிப்பு ஒன்று தேவைப்படுகின்ற சந்தர்பத்தில் நிறுவனம் சொத்துக்களின் இற்றைப்படுத்தும் அளவு தொடர்பாக மதிப்பீடுகள் தயார் செய்யப்படும். ஏதேனும் சொத்து ஒன்றினை இற்றைப்படுத்த முடியுமான அளவாக இருப்பது சொத்தின் உச்ச அல்லது விற்பனைக் கிரயத்திற்குக் குறைந்த தொகை உழைப்பு அலகின் நியாயமான பெறுமதி மாற்றம் பயன்பாட்டின் போதான அதன் பெறுமதியாகும். சொத்து ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக் தொகுதியொன்றிலிருந்து பாரிய அளவில் சுயாதினமாக நிதி பாய்ச்சல் ஏற்படாவிட்டால், சொத்தினை முன்கொண்டு சென்ற பெறுமதி அதன் இற்றைப்படுத்திய பெறுமதியினை விஞ்சுகின்ற சந்தர்பத்தில் சொத்தானது தேய்வடைந்துள்ளது எனக் கருதப்படுவதுடன் அதன் இற்றைப்படுத்திய பெறுமதியிலிருந்து பதிவளிக்கப்படும். பயன்பாட்டில் காணப்படுகின்ற பெறுமதிகளை மதிப்பீடு செய்யும் போது மதிப்பீடு செய்த எதிர்கால நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் சொத்திற்கு நிச்சயமாக ஆபத்தினை ஏற்படுத்துகின்ற முன் குத்தகைப் பெறுமதிச் சதவீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் தற்பொழுதைய பெறுமதிக்கு சமப்படுத்தப்படும். இந்த சேர்ப்புக்கள் கணிப்பீட்டு முறைமைகள் வெளியிடப்பட்ட பங்கு விலை அல்லது பெற்றுக் கொள்ளக் கூடிய ஏனைய எளிய பெறுமதிகளை குறிப்பிடுவதன் ஊடாக உறுதிப்படுத்தப்படும்.

தொடர்ச்சியான செயற்பாடு பற்றிய குறைந்து செல்கின்ற நட்டங்களை மீண்டும் மதிப்பிடலானது சாதாரண பங்குகளின் ஊடாக பெற்றுக் கொள்கின்ற சந்தர்பத்தில் முழுமையான மீள் மதிப்பீட்டு ஆதனம் தொடர்பாக அன்றி குறைந்து செல்கின்ற சொத்தின் பணியுடன் தொடர்புபட்ட வகையில் அது போன்ற செலவு வகைகளில் வருமான அளவிலிருந்து அடையாளம் கண்டு கொள்ளப்படும். இங்கு குறைந்து செல்லல் ஏதேனும் ஆரம்ப மீள் மதிப்பீட்டின் அளவு வரை சாதாரண பங்குகளின் மூலம் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

நன்மதிப்பு உள்ளடங்கலாக சொத்துக்கள் தொடர்பாக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதிக்கு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவது ஏற்கனவே அடையாளம் கண்ட குறைந்து செல்லும் நட்டம் மேலும் தொடர்கின்றதா என்று அல்லது குறைந்துள்ளதா என்பன பற்றிய ஏதேனும் நிலைமை காணப்படுகின்றதா என அறிந்து கொள்வதற்காகவாகும். அவ்வாறான நிலைமை ஒன்று காணப்படுமாயின் நிறுவனம் இற்றைப்படுத்தக் கூடிய அளவு பற்றிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படும். ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட குறைந்து செல்லும் நட்டம் ஒன்றினை இரத்துச் செய்ய முடியுமாக இருப்பது குறைந்து செல்லும் நட்டத்தை அடையாளம் கண்டு கொண்டது முதல் சொத்துக்களை இற்றைப்படுத்தக் கூடிய அளவினை தீர்மானிப்பதற்கு பயன்படுத்திய மதிப்பீடில் மாற்றம் இருக்குமாயின் மாத்திரமாகும். அது அவ்வாறு இருக்குமாயின் சொத்தின் முன்கொண்டு சென்ற அளவு அதன் அறவிட்டுக் கொள்ளக் கூடிய அளவு வரை அதிகரிக்கப்படும்.
அந்த அதிகரித்த அளவினை தீர்மானிக்க முடியுமான நிலவுகின்ற நிகர பெறுமானத் தேய்வான முன்னைய வருடங்களின் சொத்துக்கள் தொடர்பாக அடையாளம் கண்டிராத குறைந்து செல்கின்ற நட்டங்களை முன்கொண்டு சென்ற பெறுமதியை விஞ்சக் கூடாது. மீள் மதிப்பீட்டு அதிகரிப்பொன்றாக மாற்றங்கள் குறிப்பிடப்படுகின்ற காரணத்தினால் சொத்து மீள் மதிப்பீட்டு அளவுகள் முன் கொண்டு செல்லப்படாவிடில் அது போன்ற மாற்றங்கள் வருமான கூற்றிலிருந்து அடையாளம் கண்டு கொள்ளப்படும்.

**2.2.4 பூர்த்தியடையாத மூலதனம்**

பூர்தியடையாத மூலதன சொத்துக்கள் முதலாவதாக பயன்பாட்டுக்கு எடுத்த சந்தர்பத்தில் உரிய சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

**2.2.5. முதலீடுகள்**

நீண்ட கால முதலீடு, நடைமுறையல்லா முதலீடாக வகைப்படுத்தப்படுவதுடன் ஏதேனும் தேய்வடையும் நட்டம் தொடர்பில் குறைந்த கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலீட்டுக் கிரயத்திற்கு தரகுக் கட்டணம், வாடகை, குத்தகை மற்றும் வங்கிச் செலவினம் போன்றன உள்ளடங்குகின்றன. தனிப்பட்ட முறையில் தீர்மானித்த மூதலீட்டுப் பெறுமதியில் தற்காலிக மற்ற தேய்வொன்று உண்டா என்பது பற்றி பணிப்பாளர்களின் கருத்தாகயிருப்பின் தேய்வு தொடர்பான ஒதுக்கங்கள் வருமானக் கூற்றில் மேற்கொள்ளப்படும்.

**குறுங்கால முதலீடுகள்**

நடைமுறை முதலீட்டுக் கிரயத்தின் படி குறிப்பிடப்பட்டுள்ளது.

**2.2.6. இருப்புக்கள்**

மூலப்பொருள் - நிறையிட்ட சராசரி அடிப்படையில் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.
முடிவுப் பொருட்கள் - நேரடி மூலப்பொருள், நேரடி கூலி மற்றும் சதாரண தொழிற்பாட்டு நிலைமையில் நிலையான மேந்தலைக் கிரயங்களின் பொருத்தமான சதவீதத்தில் கிரணம் மதிப்பிடப்படுகின்றது.
அறை குறை வேலை - உள்ளீடு செய்யப்பட்ட மூலப் பொருட்களின் கிரயத்தில்
பொதி செய் பொருட்கள் : நிறையிட்ட சராசரியின் படி தீர்மானிக்கப்பட்ட கிரயம்
ஏனைய இருப்புக்கள் : கிரயத்தின் அடிப்படையில் ( நிறையிட்ட சராசரி அடிப்படையில் )
வழியில் உள்ள சரக்கு : மூலப் பொருள் கிரயத்தின் படி

**2.2.7 வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டிய தொகைகள்**

வர்த்தக கிடைக்க உள்ளவைகள் அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் ஒதுக்கங்களில் நிகர எதிர்வு கூறப்பட்ட பெறுமதியின் படி தொகை ரீதியாக குறிப்பிடப்பட்டுள்ளன. வேறு கிடைப்பதற்கு உள்ளளவைகள் அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன்களுக்கான ஆகக் குறைந்த கிரயத்தை ஒதுக்கியதன் பிரகாரம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**2.2.8. காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்குச் சமமான விடயங்களாக கையில் உள்ள காசும், கேள்வி வைப்புக்களும் கருதப்பட்டுள்ளன.
காசுப் பாய்ச்சல் கூற்று, காசு மற்றும் காசுக்குச் சமமான விடயங்களுக்குள் கையில் உள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள வைப்புக்கள், செயற்பாட்டு வங்கி மேலதிகப் பற்று, குறுங்கால முதிர்வினைக் கொண்ட முதலீடுகள் போன்ற விடயங்கள் காசுக்குச் சமமான விடயங்களாகக் கருதப்பட்டுள்ளன.
காசுப் பாய்ச்சற் கூற்று நேரடியல்லா முறையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**2.3. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கங்கள்**

**2.3.1. பொறுப்புக்கள்**

ஐந்தொகையில் நடை முறைப் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக இருப்பது ஐந்தொகைத் திகதி முதல் ஒரு வருடத்தினுள் நிகழக் கூடியது என எதிர்பார்த்த விடயங்களாகும். நடை முறையல்லா பொறுப்புக்களாக

வகைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களாக இருப்பது ஐந்தொகைத் திகதி முதல் ஒரு வருட காலத்தின் பின்னரான கால எல்லையில் நிகழ்வதற்கு எதிர்பார்த்த விடயங்களாகும்.

**வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்**

வியாபாரக் கடன்கொடுத்தோர்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் அவற்றின் புத்தகப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.3.2. ஒதுக்கங்கள், நிச்சியமற்ற சொத்துக்கள் மற்றும் நிச்சியமற்ற பொறுப்புக்களும்

கடந்த கால நிகழ்வின் பெறுபேறாக நிறுவனத்திற்கு உள்ள தற்பொழுதைய பொறுப்பு ( சட்டரீதியான மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்ட ) ஏற்படும் போது ஒதுக்கங்கள் அடையாளம் காணப்படும். பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்த்தல் தொடர்பாக வளங்களைத் தயார் செய்கின்ற பொருளாதாரப் பெறுபேறுகளின் பால் உட்பாய்ச்சல் ஒன்று தேவையாக இருத்தல் மற்றும் பொறுப்புக்களின் அளவிற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடிந்துள்ளது.

பொருளாதார நன்மைகளின் உட்பாய்ச்சலொன்றாக இருக்கக் கூடிய சந்தர்பத்தில் நிச்சியமற்ற பொறுப்புக்கள் காணப்படுவதாக தெரிய வரும் போது வளங்கள் வெளிச் செல்லல் மேற்கொள்ளப்படாத போது சகல நிச்சயமற்ற பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்புகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அறவிட முடியாத கடன்கள் மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள் நீங்கலாக மதிப்பிடப்பட்டுள்ள நிகரப் பெறுமதியில் வியாபார கிடைப்பனவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய கிடைப்பனவுகள் கிரயததிலிருந்து அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள் நீங்கலாக அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

**2.3.3 ஓய்வூதிய நன்மை தொடர்பான கடப்பாடுகள்**

**2.3.3.1 வரையறுக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை**

எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இற்கும் ஏற்ப தொடர்ச்சியாக ஓய்வூதிய பணிக்கொடை தொடர்பாக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொறுப்புக்கள் வெளியக ரீதியாக பெறப்படாததுடன் ஆயுட் காலத்தின் பிரகாரம் கணக்கிடப்பட்டுள்ளது.

மில்கோ ( தனியார் ) நிறுவனத்தின் ஓய்வூதிய நன்மைக பொறுப்புக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இணைப்பின் 16 ஓய்வூதிய நலன் ஊடாக விபரிக்கப்பட்டிருப்பது கொள்வனவு முறையின் அடிப்படையிலாகும்.

பணிக்கொடை பொறுப்புக்களை தீர்மானிக்கும் போது முகாமைத்துவத்தின் ஊடாக கீழ் உள்ள அட்டவனையின் பிரகாரம் நிகழ்ந்துள்ளது.

| | 2010/2011 | 2009/2010 |
|---|---|---|
| வட்டிச் சதவீதம் | 10% | 18% |
| ஓய்வு பெறும் உச்ச வயதெல்லை | வயது 57 | வயது 57 |

**2.3.3.2. நிச்சய பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

உரிய நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பொறுப்புப் பங்களிப்பு தொடர்பாக ஊழியர்கள் தகுதியுடையவர்கள். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு ஊழியர்களின் மொத்த சம்பளங்களில் முறையே 12 சதவீம் மற்றும் 03 சதவீத்தை நிறுவனம் பங்களிப்புச் செய்கின்றது.

**2.3. 4. நன்கொடைகள் மற்றும உதவு தொகைகள்**

சந்தை விலையில் நன்கொடைகள் மற்றும் உதவு தொகைகள் அங்கிகரிக்கப்பட்டுள்ளதுடன் கிடைக்கவுள்ள நன்கொடைகள் அல்லது உதவு தொகைகள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் நியாயமான உறுதிப்பாடு தொடர்பாக ஏதேனும் இருப்பின் அவை இணக்கம் செய்யப்படும்.

செலவீன விடயம் ஒன்றுடன் நன்கொடை அல்லது உதவுதொகைகள் தொடர்புபடுகின்ற போது, குறிப்பிட்ட காலப் பகுதிகளுக்கான வருமானமாக அங்கிகரிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு ஒழுங்கு முறையான வித்தில் இழப்பீடு செய்யும் நோக்கில் கிரயங்களுடன் இணைப்புச் செய்தல் முக்கியமாகும்.

நாணயமல்லா நன்கொடைகள் உள்ளடங்கலாக சொத்துக்களுடன் தொடர்புடைய நன்கொடைகள் மற்றும் உதவு தொகைகள் முக விலையில் ஐந்தொகையில் காட்டப்படுவதுடன் அச் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தின் பிரகாரம் வருமானக் கூற்றுக்களுக்கு செலவு வைக்கப்படுகின்றது.

**2.3.5. வரிவிதிப்பு**

**2.3.5.1. நடைமுறை வரி**

2009 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் அவற்றுக்கான சீராக்கங்களுக்கு ஏற்ப நிறுவனத்தின் இலாபம் 2006 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 5 வருட காலம் தொடர்பாக வருமான வரியிலிருந்து வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

**2.3.5.2 நிறுத்தி வைத்தல் வரி**

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படை மற்றும் நிதி அறிக்கை குறிக்கோள் தொடர்பாக அவற்றில் எடுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கிடையில் ஐந்தொகைத் திகதிக்கு தற்காலிக மாற்றத்தின் படி பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி நிறுத்தி வைத்த வரி தொடர்பாக ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நிறுத்தி வைத்த வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சகல தற்காலிக மாற்றங்கள் தொடர்பாக அடையாளம் காணப்படும். நிறுத்தி வைத்த சொத்துக்கள் சகல குறைக்க வேண்டிய தற்காலிக மாற்றங்களை முன்கொண்டு சென்று பயன்படுத்தப்படாத வரிப் பொறுப்புக்கள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்கள் தொடர்பாக குறைத்துக் கொள்ள இயலுமான தற்காலிக மாற்றங்களின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய வரி செலுத்த வேண்டிய இலாபமாக இருக்கக் கூடிய

தொகையிலிருந்து மற்றும் முன் கொண்டு சென்ற பயன்படுத்தக் கூடிய பயன்படுத்த முடியாத வரிப் பொறுப்பு மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் அளவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.
முன் கொண்டு சென்ற நிறுத்தி வைத்த வரிச் சொத்து அளவு ஒவ்வொரு ஐந்தொகைத் திகதிக்கும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பயன்படுத்த வேண்டிய நிறுத்தி வைத்த வரிச் சொத்துக்களிலிருந்து நூற்றுக்கு அல்லது பகுதிக்கு வாய்பொன்றை பெற்றுக் கொள்ளக் கூடிய போதியளவான வரியினைச் செலுத்த முடியுமான இலாபங்கள் மேலும் உருவாக்க முடியாது என்ற அளவில் குறைத்துக் கொள்ளப்படும். ஒவ்வொரு ஐந்தொகைத் திகதிக்கும் அடையாளம் காணப்படாத நிறுத்தி வைத்த வரிச் சொத்துக்கள் மீண்டும் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அறவிட வேண்டிய நிறுத்தி வைத்த வரிச் சொத்துக்களுக்கு வாய்ப்பளிக்கின்ற எதிர்கால வரிச் செலுத்த வேண்டிய இலாபமாக மாற்றக் கூடிய அளவுகள் அடையாளம் காணப்படுகின்றன.

சொத்துக்கள் மீள் அங்கிகரிக்கப்டுகின்ற அல்லது பொறுப்புக்கள் கொடுத்துத் தீர்க்கப்படுகின்ற போது வரிச் சதவீதம் மற்றும் ஐந்தொகையில் விதிக்கப்பட்டிருக்கின்ற அல்லது விதிக்கப்படுகின்ற வரிச் சட்டத்தின் படியான நிறுத்தி வைத்த வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆண்டின் போது பயன்படுத்திக் கொள்வதற்கு எதிர்பார்த்த வரிச் சதவீதங்கள் கணக்கிடப்படும்.

சாதாரண பங்குகளில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட விடயங்களுக்கு உரிய வருமான வரி சாதாரண பங்குகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.
நிறுத்தி வைத்த வரிச் சொத்துக்கள் மற்றும் நிறுத்தி வைத்த வரிப் பொறுப்புக்கள் தற்பொழுதுள்ள வரிப் பொறுப்புக்கள் மற்றும் அந்த வரி செலுத்த வேண்டிய பொருள் மற்றும் அந்த வரி அதிகாரத்திற்கு உரிய நிறுத்தி வைத்த வரி தற்பொழுதுள்ள வரிச் சொத்துக்களிலிருந்து மீள் நிரப்பவதற்கு சட்டரீதியாக செல்லுபடியாகும் உரிமை ஒன்று காணப்படுமாயின் மீளளிப்புச் செய்யப்படும்.

எவ்வாறாயினும், நிறுவனத்தினால் அனுபவிக்கின்ற வரி விடுதலைக் காலம் தொடர்பில் நிறுத்தி வைத்த வரி தொடர்பாக இந்த நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு ஒதுக்கமும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**2.3.5.3. கடப்பாடுகள்**

ஐந்தொகைக் திகதிக்கு சகல முக்கியத்துவம் மிக்க கடப்பாடுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் ஊடாக அடையாளம் காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**2.4 வருமானக் கூற்றுக்கள்**

**2.4.1. வருமானங்களை அங்கிகரித்தல்**

**அ. பொருள் விற்பனை**

பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு கிடைப்பதற்கு தாக்கம் செலுத்துகின்ற விதத்தில் மற்றும் வருமானம் மற்றுமல்லாது அதனுடன் தொடர்புடையதாக நிகழ்கின்ற விதத்தில் அல்லத அவ்வாறு இல்லையாயின் நம்பிக்கையான முறையில் கணக்கிட முடியுமான வகையில் விற்பனை வருமானம் அடையாளம் காணப்பட்டுள்ளது. கிடைத்துள்ள அல்லது கிடைக்க உள்ள வியாபார தரகு மற்றும் விற்பனை வரித் தொகைகளின் நிகரப் பெறுமதியின் படி சந்தைப் பெறுமதியின் படி வருமானம் கணக்கிடப்பட்டுள்ளது. உற்பத்தியினை விற்பனை செய்வதன் ஊடாக கிடைக்கின்ற இலாபம் அடையாளம் காணப்பட்டுள்ளது. பிரதான வருமானம் மற்றும் பொருள் உரிமைத்துவத்தின் நன்மையினை பயன்படுத்துனருக்கு கையளிக்கும் வகையில் பொருள் அடையாளம் காணல் நிகழ்ந்துள்ளதுடன், பொதுவாக உரிமைத்துவத்திற்கு ஏற்பான விதத்தில் முகாமைத்துவ சமரசம் ஒன்று தொடர்பாக நிறுவனம் எந்தவொரு நிறுத்தி வைத்தலையும் மேற்கொள்ளாது அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கு பொறுப்புக்கள் ஏதும் இன்றி அவை மேற்கொள்ளப்படும்.

**ஆ ) வட்டி**

வரி வருமானம் வரி அட்டுறுவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

**(இ) வேறு வருமானங்கள்**

வேறு வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**ஈ) இலாபம் மற்றும் நட்டம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையின் படி மற்றும் முதலீடுகள் உள்ளடங்கலாக நடைமுறையல்லாத சொத்துக்களின் படி வருமானங்களின் இயல்பான நிகர இலாபம் மற்றும் நட்டங்களை வெளிப்படுத்தும் போது கிடைத்த தொகையிலிருந்து குறைத்து வருமானக் கூற்றுக்களில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ள சொத்துக்களின் முன்கொண்டு சென்ற நிலுவை மற்றும் அந்தச் சொத்துக்களுடன தொடர்புடைய மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் காணப்படுகின்ற உரிய ஆதனத்தின், பொறியின் மற்றும் உபகரணங்களின் பெறுமதி திரண்ட இலாபம் / நட்டத்திற்கு நேரடியாக மாற்றம் செய்யப்படும்.
எதிர்வு கூறப்பட்ட கடன் முறையினைப் பயன்படுத்தி ஐந்தொகைக் திகதியில் வரையறுக்கப்பட்ட நலன் பொறுப்புக்களின் தற்பொழுதைய பெறுமதியாக ஐந்தொகையில் அங்கிகரிக்கப்பட்ட பொறுப்புக்கள் காணப்படுகின்றன.
